Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை (13.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 359

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு முயற்சி?

## ஜப்பானின் உதவிபெற ஆலோசனை

(கொழும்பு)

**அரசிற்கும் விடுதலைப் புலிகளும் இடையிலான சமாதான ஏற்பாட்டாளர்கள் என்ற பணியிலிருந்து நோர்வேயை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் எண்ணியுள்ளதாக நம்பகரமான செய்திகள் வெளியாகியுள்ளன.**

**அனுசரணைப் பணியைத் தொடருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயின் இலங்கைத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஊடாக அழைப்பு விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்டு இணங்கிய நோர்வே அரசு தற்போது நிபந்தனைகளை விதித்திருப்பதன் காரணமாக விசனம் அடைந்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதியாகத் தெரிவானவுடனேயே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஒன்றினைக் காண்பதற்கு ஜனாதிபதி எண்ணியிருந்தார்.

அதனடிப்படையில் ஜனாதிபதியாகத் தெரிவானதையடுத்து, சமாதானப் பேச்சுக்கள் குறித்து இருதரப்புச் சந்திப்புக்களில் ஈடுபடுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட நோர்வே அரசு தற்பொழுது நிபந்தனைகளை விதிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்கவேண்டாமென கூட்டாளிக் கட்சியான ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் கூறியுள்ளது. அத்துடன் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை நீக்கி இந்தியா அல்லது ஜப்பானை இணைத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை ஓரங்கட்டிவிட்டு ஜப்பானை இணைத்துக்கொள்ள ஜனாதிபதி முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காகவே ஜப்பானின் விசேட (10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்ரியன் சந்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சக சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். படுகாயமடைந்த அவர் உடனடியாக பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தையடுத்து பதற்றம் ஏற்பட்டது. மக்கள் தமது கடமைகளைக் கைவிட்டு பாதுகாப்புத் தேடி ஓடினர். அவ்வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபட பஸ் சாரதிகள் மறுப்புத் தெரிவித்ததனால் சில நிமிட நேரம் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலரண் மீது கிளைமோர் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா வாரிக்குட்டியூர் பூவரசங்குளம் பகுதியில் பொலிஸ் காவலரண் மீது கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 7 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் காவலரணில் இருந்த பொலிஸார் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் வவுனியா மாவட்டத்தில் மட்டும் இதுவரை 28பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-4)

## வகுப்பிலிருந்த பொலிஸாரின் மீது மன்னாரில் கைக்குண்டுத் தாக்குதல்

### 20 பேர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் பேசாலை நகரில் பொலிஸ் நிலையப் பகுதியில் நேற்றிரவு 7.20 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 20 பொலிஸார் காயமடைந்தனர்.

அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொலிஸாருக்குப் பயிற்சி வகுப்பு நடத்திக்கொண்டிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரு கைக்குண்டுகள் அடுத்தடுத்து வீசப்பட்டதனால் 20 பொலிஸார் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. இதேவேளை இக்கைக்குண்டுத் தாக்குதல் விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டதாக மன்னார் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-4)

## புளொட் உறுப்பினர் வவுனியாவில் கடத்தல்

(வவுனியா)

புளொட் இயக்கத்தின் முக்கிய உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினருமான பாரூக் என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி கணேசலிங்கம் என்பவர் வவுனியாவில் இனந்தெரியாதோரினால் நேற்று கடத்திசெல்லப்பட்டார்.

வவுனியா சிதம்பரபுரத்திற்கும் சமனங்குளத்திற்கும் இடையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வான் ஒன்றில் வந்தவர்களால் இவர் கடத்தப்பட்டுள்ளார். கடத்திச் சென்றதாகக் கூறப்படும் வான் வவுனியா கிடாச் சூரி என்ற இடத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், வானில் சென்ற மூவரையும் கைது செய்து அவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். சி.அபயசிங்க பண்டார தெரிவித்தார். (ச-4)

## இ.தொ.கா. எம்.பிக்கள் நால்வரை கட்சியிலிருந்து நீக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் அனுமதியின்றி இந்த நால்வரும் அரசாங்கத்தினை ஆதரிக்கத் திட்டமிட்டிருப்பதனாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த எம்.எஸ்.செல்லச்சாமி, வடிவேல் சுரேஸ், புத்திரசிகாமணி, ஜெகதீஸ்வரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களையே கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாதிபதியைச் சந்திப்பார்

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து விரைவில் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கிழக்கில் நாளுக்குநாள் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருகிறது எனத் தெரிவித்துள்ள அவர், அங்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு பலப்படுத்தவேண்டுமென அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவார் எனக் கூறப்பட்டது. (ச-4)

## தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஜே.வி.பி. நீண்டநேரம் ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஜே.வி.பியின் தலைவர்கள் - சில தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

இப்பேச்சுவார்த்தைகளில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்க்கட்சிகளின் சார்பில் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர். எல்.எவ். (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை கருணா குழுவினரே மேற்கொண்டனர்

## புலிகளிடம் சரணடைந்தவர்கள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே அண்மைக் காலங்களாக தொடரும் இன வன்முறை சம்பவங்களின் பின்னணியில் கருணா குழுவினரும் ஆளும் கட்சி அமைச்சரான ஏ.எல்.எம்.அத ாவுல்லாவின் தொடர்பாளர்களும் செயற்படுவதாக விடுதலைப்புலிகளிடம் சரண் அடைந்துள்ள முன்னாள் கருணா குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் சரண் அடைந்த இருவரும் கலந்து கொண்ட செய்தியாளர் சந் திப்பு ஒன்று நேற்று கரடியன் ஆறு தேனகத்தில் இடம் பெற்றது. அதன் போதே அவர்கள் இத்தகவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் எ.எல்.எம். அதாவுல்லாவுக்கும் கருணா குழுவினருக்கும் நேரடியான தொடர்புகள் இருப்பது பற்றி எமக்குத் தெரியாது. ஆனால் அதாவுல்லாவின் நெருங்கிய தொடர்பாளரான பௌசருக்கும் இந்தக் குழுவினருக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது.

அக்கரைப்பற்று பள்ளி வாசல் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை பொறுத்த வரை முதல் நாள் இரவு இனியபாரதி, தேவன்,சந்திரமோகன்,பௌசர் ஆகியோர் கூட்டாக வெளியே சென்றிருந்தார்கள். மறு நாளே முகாம் திரும்பிய இவர்களது உரையாடல்கள் மூலம் இவர்கள் தொடர்புபட்டிருப்பது தெரியவந்துள்ளது.

எமக்கு மாதாந்தம் 30 ஆயிரம்ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. இந்தக் கொடுப்பனவுகள் வெளிநாட்டு உதவி என அவர்கள் கூறுவார்கள். அவர்களிடம் தற்போது 35 பேர் வரை இருக்கின்றார்கள். ஆட்பலம், ஆயுதபலம் இல்லை. எதிர்காலத்தில் ஆட்களைப் பிடித்து பயிற்சி கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளார்கள்.

கருணா இந்தியாவில் இருப்பதாகவே எங்களுக்கு கூறப்பட்டது. தினமும் தொலைபேசியில் தொடர்பு கொள்வார் . நானும் ஒரு தடவை உரையாடியிருக்கின்றேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கு மாறும்அவர் வெற்றி பெற்றால் தேவையான உதவிகள் செய்யப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கருணா குழுவைச் சேர்ந்த மங்களம் மாஸ்டருடன் தொடர்பு கொண்டு நேரடிப் பேச்சை நடத்தினார்கள் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ச-4)


# இலங்கையுடனான 2வது டெஸ்ட் இந்திய அணி வலுவான நிலையில்

இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் புதுடில்லியில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணிஅதன்இரண்டாவது இனிங்



ஸில் 5 விக்கெட்டினை இழந்து 237 ஓட்டங்களை பெற்றுள்ளது.

நேற்றுக் காலை தனது முதல்



இனிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி சகல விக்கெட்டினையும் இழந்து 230 ஓட்டங்களை பெற்றது. பந்து வீச்சில் அனில் கும்ளே 72 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டினையும் இர்ஃபான்பதான் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் ஹர்பஜன்சிங் 67 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் விழ்த்தினர்.

அதன் பின் தனது 2.வது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஆட்ட நேர முடிவின் போது 5 விக்கெட் இழப்புக்கு 237 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களம் புகுந்த இர்ஃபான் பதான் 143 பந்துகளை எதிர்கொண்டு 10பவுண்டரிகள் ,2சிக்கசர்கள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் ராகுல்ராவிட் 53 ஓட்டங்களையும் சௌரவ் கங்குலி ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் யுவ்ராஜ் சிங் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ் 2 விக்கெட் டினையும் பெர்னாண்டோ ஒரு விக்கெட்டினையும் பண்டார ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதே வேளை இந்திய அணியின் தலைவர் ராகுல்ராவிட் 50 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 8 ஆயிரம் ஓட்டங்களையும் இலங்கையணியின் உதவி அணித் தலைவர் சமிந்தவாஸ், கம்பீரின் விக்கெட்டினை வீழ்த்தியதன் மூலம் 300 விக்கெட்டினையும் வீழ்த்தி சாதனைப்பட்டியலில் தமது இடத்தினை பகிர்ந்து கொண்டனர். (4)

# தென்மராட்சி கிழக்கில் வெள்ளப் பாதிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கிழக்குப் பகுதிகளில் வெள்ளம் அதிகளவு பாதித்துள்ளது.

நாவற்காடு, தாவடி இயற்றாலை, சுட்டிபுரம், கொடிகாமம் மத்தி போன்ற இடங்களே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. கொடிகாமம் மத்தியில் ஒரு அடிக்கு மேல் வெள்ளம் உள்ளது.

தாவடி இயற்றாலைப் பகுதியில் 170 ஹக்ரேயர் வயற் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. 5 ஏக்கர் மேட்டு நிலப்பயிர்கள் கடும் அழிவுக்குள்ளானதாக அப்பகுதி கிராம உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் பனை மரம் ஒன்று கடும் காற்றினால் வேருடன் சாய்ந்து வீட்டின் மேல் விழுந்ததால் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.சுட்டிபுரம் மிருசுவில் வீதி வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது.

இதைவிட கைதடி ஊரியான் கோயிலாக் கண்டி, சரசாலை தெற்கு போன்ற இடங்கள் வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

(ற-108)

# காயம்

(சாவகச்சேரி)

வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததனால் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி எறியப்பட்டு ஒருவர் கையில் பலத்த காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கச்சாய் வீதி சப்பச்சி மாலடியில்நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தி ல் அல்வாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இரத்தினம் சுகந்தன் (வயது-21) என்பவரே காயமடைந்தவராவார்.

(ற-108)

## வாழைச்சேனையில் கைக்குண்டு தாக்குதல்; ஒருவர் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை பேருந்து நிலையத்தில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலினால் பொது மகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தாக்குதலை நடத்திய நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. வாழைச்சேனை பேருந்து நிலையத்தில் நடமாடிய பாதுக்காப்பு தரப்பினரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

காயமடைந்த நபர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற)

## ரயில் நிலையங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்படும்

ரயில் நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்த ரயில்வே மற்றும் போக்குவரத்து அமைச்சர் எ.எச்.எம். பௌஷி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரயில் நிலையங்களில் இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக் காரணமாக பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சட்டவிரோத வர்த்தகர்கள் ரயில் நிலையத்திலும் , ரயில் வண்டிகளிலும், விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவதை தடைசெய்ய அமைச்சர் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

இத்தகைய வர்த்தகர்கள் எதிர்காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ரயில்வே அதிபர்களிடம் அனுமதி பெற வேண்டும்.

இதே வேளை கடமை நேரங்களில் ரயில்வே ஊழியர்கள் ரயில் திணைக்களத்தில் இருந்து வெளியேறுவது தடை செய்யப்பட்டுள்ளது. (து-9)

## இலங்கை வங்கியின் 20ஆவது தலைவர்

இலங்கைவங்கியின் 20 ஆவதுதலைவராக உதயஸ்ரீகாரியவசம் நேற்றுக் கடமைகளை பொறுப்பேற்றார்.

பொருளாதார மற்றும் நிதித்துறைகளில் தேர்ச்சி பெற்ற இவர் உள்ளூர் மற்றும் வெளியூர்நாடுகளில் பல பட்டப்படிப்புக்களை மேற்கொண்டவர்.

நேற்றுக் காலை பதவியேற்றபின்னர் அவர் ஊழியர் மத்தியில் உரையாற்றுகையில்;

தேசிய பொருளாதாரத்தில் தலைமைத்துவம் வாய்ந்த வங்கியைப் பலப்படுத்தப் போவதாக உறுதியளித்தார்.

அரசாங்கம் இலங்கை வங்கியை ஒரு போதும் தனியார்மயப்படுத்த மாட்டாது என்றும் கூறினார். (து-7)

## கடைகள் திறப்பு

எதிர்வரும் நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் 15.12.2005 வியாழக்கிழமை தொடக்கம் 01.01.2006 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விடுமுறைதினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும்எனவும் 01.01.2006 திகதிக்குப் பின் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் ஞாயிறு , போயா மற்றும்வர்த்தக விடுமுறை தினங்களில் கட்டாயமாக கடைகளைப் பூட்டி ஒத்துழைக்கும் படியும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (து)





தேசிய மட்டத்தில் நடைபெற்ற கலை விழா போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கும் அதில் பங்கு பற்றிய மாணவர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக் காலை தூயவன் அரச அறிவியற் கல்லூரியில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆற்றுவதையும் வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (ச-4)

### போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு

# எதிர்வரும் ஜனவரி - 1 ற்குப் பின்பு மரண தண்டனை நிறைவேற்றப்படும்?

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றசசாட்டுகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனைகளை நிறைவேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறான மரண தண்டனைகள எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னா நடைமுறைப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு 13ஆம் பிரிவிற்கமைய நச்சு ரக அபின் மற்றும் அது தொடர்புடைய மூலிகைகள், தொடர்புடைய திருததச் சட்டத்திற்கமைவாக, மொபீன் போன்ற போதைப் பொருள் மூன்று கிராம் அல்லது அதற்கு மேலாக வைத்திருப்பது ஹெரோயின் இரண்டு கிராம் அல்லது அதற்கு மேலாக வைத்திருப்பது, கொக்கேயின் 2 கிராம் அல்லது அதற்கு மேலாக வைத்திருப்பது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிப்பதற்கான சட்டரீதியான அங்கீகாரம் மேல நீதிமன்றத்திற்கு உள்ளது.

தற்போது நாட்டில் போதைப்பொருள் பயன்பாடு தீவிரமாக பரவிவருவதனால் அதனை ஒழிக்க அல்லது கட்டுப்படுதத நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்கள் உளளிட்ட பல்வேறு அமைப்புக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே ஜனாதிபதி இந்த நிலைப்பாட்டை எடுக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ற)

## கடைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் 15.12.2005 வியாழக்கிழமை தொடக்கம் 01.01.2006 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் 01.01.2006 ற்குப் பின் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் கட்டாயமாக கடைகளைப் பூட்டி ஒத்துழைக்கும் படியும் யாழ் வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (த)

# திருமலையில் இரு இந்திய கடற்படைக்கப்பல்கள்!

(திருகோணமலை)

இந்தியாவின் கடற்படைக்கப்பல்கள் இரண்டு திருமலைத்துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளன.

ஐஎன்எஸ் சுகன்யா, ஐஎன்எஸ் கிர்பன் என்கின்ற இரண்டு இந்தியக் கடற்படைக் கலங்கள் விசாகப்பட்டினத்தில் இருந்து வந்தடைந்துள்ளன.

இது குறித்து இந்தியத்தூதரகம் வெளியிடடுள்ள செய்திக் குறிப்பில் இந்தியக் கடற்படையின் நல்லெண்ண அடிப்படையிலான இலங்கைக்கான விஜயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தவிரவும், சிங்கப்ப,ர் மலேசியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகளிற்கும் இக்கப்பல்கள் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல்களில் ஐஎன்எஸ் சுகன்யா இலங்கை சுனாமி பாதிப்புககுள்ளான போது மருத்துவ உதவிகளுக்காக இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மஹிந்தவின் சமாதான முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்குக!

### மல்வத்தை பீடாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். தேர்தலில் ஜனாதிபதியை ஆதரித்த 28 அரசியல் கட்சிகளும் சமாதான முயறசிகளுக்கு ஆதரவினை வழங்கவேண்டுமென மல்வத்தை பீடாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவதானத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும், சமாதானப் பாதையினை முன்னெடுத்துச் செல்கின்றார். இந்த நிலையில் அவரைத் தனிமைப்படுத்தாமல் அவர் செல்கின்ற பாதையினை சக்திப்படுத்துவதற்கு சகலரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் மலவத்தை பீடாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# வட - கிழக்கு படையினருக்கு சகல வசதிகளும் வழங்கப்படும்

### சரத் பொன்சேகா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பரதேசங்களில் படையினருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுமுன் தினம் விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளருக்குக் கருததுத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு- கிழக்கு பிரதேசங்களுககு மேலதிகப் படையினரும், நவீன ஆயுத தளபாடஙகளும் அனுப்பி வைக்கபபடவுள்ளன. இதன மூலம் படையினரின் பலம் அதிகரிக்கும்.

படையினருக்கு நிலவும் பிரச்சினைகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே எனது முதல் வேலைத்திட்டமாகும்.

வடக்குக் - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வே காணப்படவேண்டும அந்தத் தீர்வின் மூலம் செயற்படுவதே படையினரின் பொறுப்பாகும் என்றார். (ற-8)

# எஸ்.பி.க்கு பொது மன்னிப்பு வழங்க மஹிந்த நீதிமன்றத்திடம் கருத்து

முன்னாள் அமைச்சர் எஸ்.பிதிஸாநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி உயர் நீதிமன்றத்திடம் கருத்துக் கேட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான ஐவர் கொண்ட நீதிபதிகள் குழு முன்னாள் அமைச்சர் திஸாநாயக்கவுக்கு இரண்டு வருட கால கடுழியச சிறைத்தண்டனை விதித்தது.

இந்த நிலையில், அவருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு அரசியலமைப்பின் 34 ஆவது முதலாவது சரத்தின் படி ஜனாதிபதிக்கு அதிகாரமுள்ளது.

நீதிமன்றத்திற்கு உரிய கௌரவத்தை அளிக்கும் விதத்தில் உயர்நீதிமன்றத்திடம் இது தொடர்பாக கருத்துக் கேட்பதென்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

முனனாள அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படும் பட்சத்திலும் அவர் 6 மாதங்களுக்கு அதிகமாக சிறையில் இருப்பதினால் அரசியலமைப்பின் 89-இ மற்றும் 91 முதலாவது சரத்துக்களின் அடிப்படையில் 7 வருடங்கள் வரை நடாளுமன்ற தேர்தலில போட்டியிடவோ வாக்களிக்கவோ அவரால முடியாமல் போகுமென சட்டத்துறை சார்ந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-9)

# 15 வருடங்களாகத் தடைப்பட்டிருந்த பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

கடந்த பதினைந்து வருடகாலமாக தடைப்பட்டிருந்த மாந்தைகிழக்கு பிரதேசத்தில பனங்காமம் கிராமத்துக்கான, பஸ் போக்குவரத்துச் சேவைகள் கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை வைபவரீதியாக பனங்காமத்தில் இருந்து மாங்குளம் ஊடாக முகமாலைக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாரம்ப விழாவனது மூன்று முரிப்பு போரெழுச்சிக்குழுச் செயலாளர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

தேசியக் கொடியினை, மாவீரரின் தந்தை கு.குலநாதன், ஏற்றிவைக்க மங்கள விளக்கை கிராம சேவையாளர் சி.சுந்தரலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவா செ.சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றிவைக்க பஸ் சேவையினை மாந்தை கிழக்கு பிரதேச சபை உத்தியோகத்தர் வே.ம.இந்திரநாதன் நாடாவை வெட்டி, ஆரம்பித்து வைத்தார்.

பனங்காமம் கிராமமானது வன்னிப் பிராநதியத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு கிராமமாகும். இக் கிராம மக்கள் அயல் கிராமங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் வியாபாரத் தேவைகளையோ, மருத்துவ தேவையையோ, முன்னெடுத்துச் செல்ல முடியாதளவுக்கு கடந்த 15 வருடங்கலாக போக்குவரத்து ஒரு தடையாக இருந்தது. 1990ஆம் ஆண்டுக்கு முன் முல்லைத்தீவு, கிளிநொச்சி சாலைகள் பனங்காமம் ஊடாகவே சகல போக்குவரத்துச் சேவைகளையும நடாத்தி வந்தன இன்று அநேக சேவையை தமிழீழ போக்குவரத்துச் சேவையினர் நடாத்தி வருகின்றனர். (த-128)

# தமிழர் பெருமளவு வாழும் பகுதிகளில் தமிழை அரசமொழியாக்க ஆராய்வு

வடக்கு - கிழக்கு மாகாணங்களைவிட தமிழ் மக்கள் பெருமளவு வாழும் பகுதிகளில் தமிழ்மொழியை அரச கருமமொழியாக அமுலாக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கவனம் செலுத்தி வருவதாக பதிவாளர் நாயகம் எல்.கே.ரட்ணசிறி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழ் மக்கள் பெரும்பாலும் வாழும் நுவரெலியா மற்றும் பதுளை மாவடடங்களில் தமிழ்மொழியை அரசகருமமொழியாக்குவதற்கான புதிய திட்டங்களை வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் இனம காணப்படும் பிரதேசங்களில் அரச ஆவணங்களை தமிழ் மொழியில் வெளியிடுவதற்கான யோசனை முன்வைக்கப்படடுள்ளது.

பிறப்பு இறப்பு, திருமணப்பதிவுகள் உட்பட மற்றும் பல விடயங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைப்பது இதன் நோக்கமாகும்.

எவ்வாறாயினும் இந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவையென்று பதிவாளா நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-9)

# சட்டவிரோத மதுபானத்தால் 14 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்த விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சட்டவிரோத மதுபானம் அருந்தி 14 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் பராக்கிரம ஏக்க நாயக்க இது குறித்துத் தெரிவிக்கையில்,

சட்டவிரோத மதுபானத்தில் எவ்வாறு நச்சுத்தன்மை ஏற்பட்டது? என்பது குறித்து ஆராயும் முகமாக மதுபானத்தின் சகல மாதிரிகளும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

மதுபானம் தயாரித்து விற்பனை செய்யும் இடங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி விற்பனை செய்யப்பட்ட இடததிலேயே மதுபானத்தில் நச்சுத்தன்மை ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட இடத்தில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோத மதுபானம் வேறு இடங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பகுதிகளிலிருந்து இதுவரை எந்தவித அசம்பாவிதம் பற்றியும் தகவல கிடைக்கவில்லை.

அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சட்டவிரோத மதுபானத்தில் நச்சுத்தன்மை ஏற்பட்டதறகான காரணம் பற்றி தெரிவிக்கப்படும் என்றார். (ற-7)

## சூட்டுக்கொலை

கடவத்த - இராகம பிரதான வீதியில் உணவகம் ஒன்றிற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு மூவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட பிரச்சினை ஒன்றின் காரணமாகவே இந்தக் கொலைகள இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலை தொடர்பான விசாரணைகளைப பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (த-7)

# வட - கிழக்கில் வருடாந்தம் ஏழாயிரம் பேர் மாயம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் வருடத்திற்கு சுமார் 7 ஆயிரம் பேர் வரை காணாமல் போவதாக மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் தமக்கு மூவாயிரத்திற்கும் குறைவான முறைப்பாடுகளே கிடைப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வருடத்தில் 4 ஆயிரம் பேர் வரை சட்டவிரோத ஆயுதக் குழுக்களினால் கொல்லப்படுவதாகவும் மனித உரிமை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ற-9)

# பவளவிழாச் சபை பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் அடுத்த ஆண்டு இடம்பெறவிருக்கும் பவளவிழாத் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிககுக் கல்லூரியின் பிரதான மணடபத்தில் பவளவிழாச் சபையினருக்கான பொதுக் கூட்டம் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரிய பிரதிநிதிகள், மாணவப் பிரதிநிதிகள், பழைய மாணவர்சங்கச் செயற்குழுவினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயற்குழுவினர், தர்மகர்த்தா சபை உறுப்பினர், நலன் விரும்பிகள் எனப் பலரை உள்ளடக்கியதாக இச்சபை அமைக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## இன்று ஒரு தகவல்

# இடத்தின் மகிமை

பார்த்தசாரதி என்றால் என்ன அர்த்தம்? பார்த்தனுக்கு சாரதி. அதாவது அருச்சுனனுக்குத் தேரோட்டியவன். அது கண்ணன். இது நமக்குத் தெரியும். இந்தக் கண்ணன் அருச்சுனனுக்கு இரண்டாவது பார்த்தசாரதிதான். அப்படியென்றால் முதல் பார்த்தசாரதி என்று ஒருவர் உண்டா? உண்டு. கண்ணனுக்கு முன்பே அருச்சுனனுக்குத் தேர் ஓட்டியவன் ஒருவன் உள்ளான். அவன் யாரென்றால்....உத்தரகுமாரன். விராடதேசத்து இளவரசன்.

பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த நேரம். அவர்கள் விராட நகரத்தில் தான் இருப்பார்கள் என்று துரியோதனன் யூகிக்கிறான். அவர்களை வெளிப்படுத்துவதற்காக சில முயற்சிகள் செய்தான். தன்னுடைய யோசனைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு போய் அந்த நாட்டில் உள்ள பசுக்களை பிடித்துக் கொண்டு போகிறான். அந்த நேரம் விராடன் வேறு ஒரு திசையில் போர் செய்வதற்காக போயிருந்தான்.

அவனது மகன் உத்தரகுமாரன். சரியான பயந்தாங்கொள்ளி. கத்தியைப் பார்த்தாலே பயப்படுவான். அவன் எங்கே சண்டை போடுவது? இருந்தாலும் வேறுவழியில்லை. அப்பா ஒருபுறம் போய்விட்டான். இவன் இன்னொரு போர் முனைக்கு செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. இந்த சமயத்தில் அங்கே இருந்த அருச்சுனன் இவனுக்கு உதவி செய்ய விடுகிறான். எப்படி?

அருச்சுனன் தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொள்கிறான். உத்தரகுமாரன்...அதாவது பேடி உருவம் எடுத்துக் கொண்டு தேர் ஓட்டிக்கொண்டு வருகிறான். உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருந்தான். பார்க்கிறவர்களெல்லாம் உத்தரகுமாரன் தான் கௌரவர்களை முறியடித்துக் கொண்டு வருகிறான் என்று நினைத்து அவனைப் பாராட்டுகிறார்கள். அருச்சுனனும் "தான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். அந்த ரகசியம் நமக்குள்ளேயே இருக்கட்டும்" என்று உத்தரகுமாரனிடம் சொல்லிவிடுகிறான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தரகுமாரனுக்கு போரில் ஜெயித்தான் என்ற பெயரும் புகழும் எப்படி வந்தது? அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை என்கிறார் ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர்.அதாவது இடத்தின் மகிமை! அது எப்படியென்று கேட்டால் அவன் கொஞ்சநேரம் உட்கார்ந்து தேரோட்டினானே அந்த இடத்தின் மகிமை தான் அவனுக்குப் பெருமை சேர்த்துக்கொடுத்து, பின்னால் கிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப் போகும் இடமல்லவா அது? அந்த சாரதி ஸ்தானத்தில் உத்தரகுமாரன் முன்பே உட்கார்ந்தான். அதனால் அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது.

ஒருநாற் காலிக்கு மதிப்பு ஏற்படுவதே அதில் உட்கார்பவர்களைப் பொறுத்ததுதானே சார்! இதோ இருக்கிறதே இது இன்னார் உட்கார்ந்த நாற்காலி என்று இப்போதும் நாம் சொல்லிக் கொள்கிறோம் அல்லவா.நாமெல்லாம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தால்...அந்த நாற்காலி ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு அதில் உட்காரவேண்டும். அதுதான் நமக்கும் நல்லது. நாற்காலிக்கும் நல்லது.

ஒரு ஆள் ஒரு அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்தான். முதல்நாள் போய் அவனுக்கென்று இருந்த நாற்காலியில் உட்காரப் போனான். உட்காரப் போவதற்கு முன்பு ஒரு சபதம் எடுத்துக் கொண்டான்."நான் இலஞ்சம் வாங்கமாட்டேன்" என்று."அப்படியென்றால் என் மீது உட்காரதே" என்று கத்தியதாம் அந்த நாற்காலி:

'ஏன்?'என்று கேட்டான் இவன்."ஏனென்றால் நானே இந்த அலுவலகத்திற்கு இலஞ்சமாக வந்து சேர்ந்த நாற்காலி தான்" என்றதாம் அந்த நாற்காலி.

இது...அந்த இடத்தின் மகிமை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முதியோர் அமைப்பு அங்குரார்ப்பணம்

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டையில் முதியோர் அமைப்பு என்ற சங்கம் கடந்த வியாழக்கிழமை புதிதாக அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ளது.இவ்விதம் ஒரு சங்கம் யாழ்.மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. இதுவே முதற் தடவை என்பதும், கிராம அலுவலர் கே.சுந்தரலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகவே இச்சங்கம் உருவாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி ஸ்பெல்மன் பாலகுமாரியின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 30க்கு மேற்பட்ட வயது முதிர்ந்தோர் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்பின் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் ஏகமனதாக போட்டி இன்றி தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்-கே.ரி.ஜெயசிங்கம், தலைவர் சச்சிதானந்தம் ஜே.பி, உபதலைவர்-கப்ரின டி.ஏ.எம். குணசிங்கம் ஜே.பி,செயலாளர்-நடராசா தர்மலிங்கம், பொருளாளர் நமசிவாயம் பரமசாமி இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களாக திருமதி குமாரசாமி விஜயலக்ஷ்மி, செல்வி குக் யோகராணி, திருமதி செபமாலை இருதயம், திருமதி குமாரசாமி புவனேஸ்வரி, இராயப்பு பெனடிற் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(த-110)

# அருட்கவி சீ.விநாசித்தம்பியின் மறைவுக்கு இரங்கல்

(யாழ்ப்பாணம்)

அருட்கவி சீ.விநாசித்தம்பியின் மறைவுக்கு கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,நல்லை ஆதீன குருமுதல்வர்,செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், பேரசிரியர் சி.க.சிற்றம்பலம்,இந்து சமயப் பேரவையின் செயலாளர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

சொல்லாலும் செயலாலும் திருவருள் நிறைந்த தெய்வீக வாழ்வு வாழ்ந்தவர் அருட்கவி ஐயா அவர்கள். 60ஆண்டுகளுக்கு மேலாக அவரது ஆத்மீகத் தொடர்பு எனக்குக் கிடைத்தது. கணீரென்ற குரலில் அவர் ஆற்றிய தெய்வீக சொற்பொழிவுகள் என் நெஞ்சில் நிறைந்திருக்கிறது.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவியின் திருக்கோவில் வாசலில் அவர் ஆற்றிய அருள் உரைகள் அற்புதம் நிறைந்தவை. அம்பாள் மீது அவர் பாடிய திருவூஞ்சல் பாடல்கள் அருட்சுவை உடையவை. முதுமையிலும் தன்பணி தொடர்ந்த தருமவான் சகோதரி என்று அவர் அழைக்கும் வார்த்தைகள் கேட்டு ஆனந்தம் அடைவேன்.

எத்தனை ஆலய விழாக்கள், அரங்குகள், சபைகளில் யானும் அவருடன் உரையாற்றிய நாட்களை மீளநினைத்துப் பார்க்கிறேன். எல்லாம் இறையருள். அன்னாரின் ஆத்மா போற்றுதற்குரியது. சமாதி நிலையிலிருந்து எல்லோருக்கும் அருட்கவி ஐயா ஆறுதல் தரவேண்டும் என அம்பாளை இறைஞ்சி அமைகிறேன்.

**நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

எங்கள் திருநாட்டில் அருள் ஒளி பரப்பிய உன்னதமான ஆன்மீகத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின் மகாசமாதி செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகிறோம்.

சிறந்த ஆசார சீலர்களாக சைவத்தமிழ் அறிஞராக புகழுடன் தொண்டாற்றிய பெருந்தகையின் வாழ்வு மகத்தானது.இந்துசமயப் பேரவையின் தலைவராக விளங்கி சைவ சமயத்தின் உன்னத காவலராக எம்முன் விளங்கினார்.

தொல் பிரசங்க மரபை தமது காலம் முழுவதும் காப்பாற்றிய அருள்நிறைந்த கலைஞர், நல்லை ஆதீனத்தோடு மிக நெருக்கமான தொடர்புடைய இப் பெருந்தகையின இடத்தை யாரும் நிரப்ப முடியாது. திருவருள் சக்தி நிறைந்த பேரொளி தேகம் நீங்கிய நிலையில் இறைவனோடு இரண்டறக் கலந்து நின்று எம் மண்ணை ஆசீர்வதிக்க வேண்டி தில்லை நடராசன் திருப்பாதம் பணிந்து பிரார்த்தித்து அமைகிறோம்.

**செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்**

அருள்வார்த்தைகளால் அடியவர்களை ஆற்றுப்படுத்திய அருட்கவி ஐயாவின் மகாசமாதியால் ஏற்பட்ட பிரிவு சைவ உலகிற்கு பேரிழப்பாகும். கவிவல்லவராய்,சொற்பொழிவாளராய், சோதிபராய், நல்லாசிரியராய், அருள் வளத்தால் ஆறுதல் தருபவராய் எம்முன் விளங்கிய நடமாடும் தெய்வம் எம்மை விட்டு சென்றமை தாங்கமுடியாத துயரைத் தருகிறது.

பழுத்த பழமாக, அறிவின் சிகரமாக நின்று பலரது வாழ்வைப் பயனுள்ள நெறிக்கு வழிப்படுத்திய புண்ணிய ஆத்மா அருட்கவி ஐயா.இவரது இடத்தை நிரப்ப எம்மண்ணில் யாரும் இல்லை.சிறந்த ஆளுமை மிக்க ஆன்மீகத் தலைவரை ஈழத் திருநாடு இழந்து தவிக்கிறது.

பண்ணோடு பாடி தீது அகற்றும் திருநீற்றை வழங்கி அடியார் அச்சம் போக்க இவ் அவனியில் இனி யார் உளர்?என் செய்வோம் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்ற மகானின் வார்த்தைகளை மனதிலிருத்தி சமாதி நிலையில் இருக்கும் அருட்கவி சுவாமிகளின் ஆசியை வேண்டுதல் செய்வோமாக.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

அருட்கவி ச.விநாசித்தம்பி ஐயா மகாசமாதி எய்திய செய்தி சைவ உலகை பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது. நாவலர் பெருமானுக்குப் பின் அவர் வழி நின்று சைவ சமயத்தின் மேன்மைக்கு உழைத்த பரம்பரையைச் சேர்ந்தவர் ஐயா என்றால் மிகையாகாது. சைவ வாழ்வு இன்றைய காலத்தின் தேவை. அதுவும் கடந்த 20ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் போரின் அனர்த்தங்களால் பலவாறு இன்னல்பட்டு உழலும் மக்களை இறையுணர்வும் இறைபக்தியுமே காத்து நிற்கின்றது. இறைபக்தியை தமது சொல்லாலும் செயலாலும் மக்களுக்கு ஊட்டி அவர்களை மனநிறைவு உள்ளவர்களாக நிம்மதி உடையவர்களாக பக்குவம் பண்ணுவதில் ஐயா அவர்கள் ஆற்றிய பணி மகத்தானது.மனித வாழ்விற்கு தேவையானது, நிம்மதி.இதனை அளிக்கவல்லவர்கள் அருளாளர்கள் தான். இவர்கள் தான் இறைநிழலில் சஞ்சரித்து மக்களை நல்வழிப்படுத்தும் பேரருளாளர்கள்.

ஐயா இதுபற்றிய பணி எமது மக்களுக்கு திக்கற்றவர்களுக்கு திசை காட்டிபோல் அமைந்தது. தமது சமயப் பணியை சமூக நலனுக்காக செலவு செய்த பெருந்தகை. எமது இந்துசமய பேரவை ஐயா அவர்களை தலைவராகக் கொண்டு பெருமையடைந்தது. அதுவும் இக்கட்டான காலகட்டத்தில் அவரது வழி நடாத்தல் மிகமிக தேவைப்பட்ட இக்கால கட்டத்தில் ஐயாவின் மறைவு நம்மிடையே பெரிய வெற்றிடத்தை அளித்துவிட்டது. இறைநம்பிக்கையும் இறைபணியும் தான் நமக்கு உறுதுணை.

**இந்துசமய பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன்**

அளவெட்டி நாகேஸ்வரம் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் இந்துசமயப் பேரவைத் தலைவர் ஆத்மீக பெருந்தகையுமான சைவப் பெரியார் அருட்கவி சீனியர் விநாசித்தம்பி அவர்கள் தனது (3.11.1923) 83ஆவது வயதில் மகா சமாதியடைந்துள்ளார்.

அன்னார் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய அருட் தொண்டுகள் அளப்பரியன. நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை பழந்தமிழ் மரபுக்கவிகளில் ஆக்கி வெளியிட்டுள்ளார்.இந்நாட்டில் சமாதானம் மலர வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு பிரார்த்தனைகளை நடாத்தியும் அதில் பங்குகொண்டுள்ளார்.

தியானப் பாவனைகள் மூலம் இறைவனை சதா தாசித்து அபரிமிதமான அருள் வளத்தை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த இவர், மக்களின் குறைகளை தீர்த்து அவர்களின் துன்பத்திலிருந்து விடுபட அருளாசி வழங்கி வந்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகம் இவருக்கு 2002ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவரின் பெருமையை உணர்ந்த பல நிறுவனங்கள் பல்வேறு விழாக்களையும் கௌரவங்களையும் வழங்கியுள்ளது.நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்னாள் அறங் காவலர் ஸ்ரீ.சண்முகதாச மாப்பாண முதலியார் இவருக்கு அருட்கவி எனும் அருள் விருதை வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமை பல படைத்த அருட்கவி ஐயாவின் பணிகளைத் தொடர்வதே நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும். □

### அருட்கவி சீ.விநாசித்தம்பி

தந்தையார்-விநாயகர் சீனியர்
தாயார் -அன்னப்பிள்ளை
பிறப்பு -3.11.1923-மகநட்சத்திரம்
வீரசைவ மரபில்
ஆரம்பக் கல்வி-அளவெட்டி அருணாசல வித்தியாலயம்
உயர்கல்வி-அளவெட்டி அருணோதயக் கல்லூரி
7.3.1945 முதல் ஆசிரியப்பணி திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி
திருமணம் -அன்னம்,5பிள்ளைகள்

**இவரால் உருவாக்கப்பட்ட ஆலயம்**

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம் 1952

**படைப்புகள்**

1.கந்தபுராண வசன காவியம்
2.விநாயகபுராண வசன காவியம்
1000க்கு மேற்பட்ட தலங்கள் மீதான ஊஞ்சல் பா
3.அருள் ஒளிக் கீர்த்தனைகள்
4.நாராயணர் பிள்ளைத்தமிழ்
5.தெய்வீக அருட்புகழ்

**முதல் பிரசங்கம்** 1945இல் நாவலப்பிட்டியில் கண்ணப்பநாயனார் பற்றியது.
இலங்கை வானொலியில் ஏராளமான நற்சிந்தனை சொற்பொழிவுகள்

**ஆற்றிய பதவிகள்**

1999முதல் இந்து சமயப் பேரவைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் 2003-2005

**சோதிட வைத்தியப் பணி**

பரம்பரைரீதியாக கற்று செயற்படுத்தினார்.

**நாடக நடிகராக இளமையில்**

லதாங்கி, சந்திரமதி,கண்ணகி, மானமுள்ள மனிதன்,நந்தனார் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.

**கட்டட நிலையம் எடுத்தல்**

வாஸ்து சாஸ்திரம் கற்று வல்லவராக விளங்கினார்.

**விருதுகள் கௌரவங்கள்**

யாழ்.பல்கலைக்கழகத்தால் M.பட்டம் வழங்கப்பட்டது,சர்வதேச பல்கலைக்கழகத்தால் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது,அகில இலங்கை இந்து மாமன்றத்தால் சிவநெறிச் சீராளர் விருது, அகில இலங்கைக் கம்பன் கழகத்தால் மூதறிஞர் விருது.

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

எச்.என்.பி.அசூரன்ஸ் பிராந்திய அபிவிருத்தி நிலையம் நாளை புதன்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு இல.62,64 ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.(த)


# நாய்களும் சிரிக்குமாம்!

(ஸ்போகன்)

மகிழ்ச்சியாக இருக்கும்போது நாய்களும் வாய்விட்டுச் சிரிக்கும் என்று விலங்கின ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறியுள்ளார்.அவ்வாறு மகிழ்ச்சியில் ஒரு நாய் சிரித்தால், அது சுற்றியுள்ள மற்ற நாய்களுக்கும் இதமாக இருக்கும் என்று ஸ்போகன் கவுண்டி பிராந்திய விலங்குகள் பாதுகாப்புச் சேவை அமைப்பின் வளர்ச்சி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாட்ரீஷியா சிமானெட் தெரிவித்துள்ளார்.

ஒரு நாய் மகிழ்ச்சியாக இருக்கும்போது சிரிக்கும் ஒலியை ஆடியோ டேப்பில் பதிவுசெய்து, அதை ஸ்போகன் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு பகுதியில் ஒலிபரப்புச் செய்தார் பாட்ரீஷியா. உடனடியாக அங்கு குரைத்துக் கொண்டிருந்த நாய்கள் அமைதியாக டேப்பில் வந்த நாயின் சிரிப்பொலியைக் கேட்கத் தொடங்கிவிட்டன. (ற)

# பூகோள இடநிலை உணர்த்தும் அமைப்பு (GPS)



GPS துணைக்கோள் குழுமம்

"Global Positioning System" என்பது பூமியைச் சுற்றி வரும் 24 துணைக் கோள்கள் கொண்ட குழுமமும், தரையில் உள்ள கட டுப்பாட்டு நிலையமும் கொண்ட GPS, ஒரு உலகளாவிய இடநிலை உணர்த்தும் அமைப்பு.

துணைக்கோள்கள், தரையில உள்ள ஏற்பிக்கு ரேடியோ சைகை களை செலுத்துகின்றன. இச்சை கைகளை வைத்து மிகவும் துல லியமாக முப்பரிமாண இடநிலை யை அறிய (அட்சரேகை - Latitude, தீர்க்கரேகை - longtitude மற் றும் குத்துயரம் - altitude) முடிகிறது.

GPS செயற்கை நடத்சதிரங்க ளான துணைக்கோள்களைப் பொரு ந்து புள்ளிகளாகப் பயன்படுத்தி, இடநிலைகளை ஒரு மீற்றர் துல்லி யத்துக்கு கணிக்கிறது. GPS ஏற்பி கள், ஒரு சில தொகுப்புச் சுற்றுக ளில் அடங்கும் அளவுக்கு சிற்றள வாக்கப்பட்டுள்ளன. இதனால், இந்நுட்பம் சதாரணமாக பலரால இன்று அணுகக் கிடைக்கிறது.

GPS ஏற்பிகள் இன்று கார்கள, படகுகள், வானூர்தி, உழவு இயந திரங்கள் மற்றும் மடிக் கணனிக ளில் இடம்பெறத் தொடங்கியுள் ளன. GPS, அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்துக்குச் (Department of Defense) சொந்தமானது. அவாகளால் இயக்கப்படும் GPS, உலகெங்கும் பயன்படுத்தக் கிடைக்கிறது. சுருக்கமாக, GPS வேலை செய்யும் விதத்தை பின் வருமாறு விளக்கலாம்:

1.21 GPS துணைக்கோள்கள் மற றும் மூன்று உதிரித் துணைக் கோளகள் பூமிக்கு 10,600 மைலுக்கு மேலமைந்த கோளப்பாதையில் இருக்கின்றன. இந்தப் பாதை, பூமி சுழலும் அதே வேகத்தில் துணைக் கோள்கள் செல்லுமாறும், பூமி சுழலும் போதும் பூமிக்கு மேலுள்ள துணைக்கேளர் அதே இடத்தி லேயே எப்பொழுதும் இருக்கும் வண்ணம் அமைந்த பாதை (geosynchronous); பூமியில் எந்த ஒரு இடத்திலிருந்தும் 4 துணைக்கோள் களாவது ரேடியோ ஏற்பிக்கும் 'தெரியும்' வண்ணம் துணைக்கோள் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

2.ஒவ்வொரு துணைக்கோளிலும் கணனி, அணுவியல் கடிகாரம் மற றும் ரேடியோ பொருத்தப்பட்டுள்ளது. தன்னுடைய கோளப்பாதை பற்றிய நல்ல 'புரிதல்' கொண்டுள்ள துணைக்கோள், மாறிக்கொண்டே வரும் தன் இடநிலை மற்றும நேர த்தை தொடர்ந்து ஒலிபரப்புகிறது. (நாளுக்கொருமுறை ஒவ்வொரு துணைக்கோளும் நேரம் மற்றும் இடநிலை பற்றிய தன்னறிவை தரை நிலையத்தோடு ஒப்பிட்டு சிறிய திருத்தங்களைச் செய்து கொள்கின்றது.


3.தரையில் உள்ள GPS ஏற்பி யின் கணனி 'மூவச்சாக்க முறை யில்' 4 துணைக்கோள்கள்களில் மூன்றை அணுகி, தன் இடநிலை யைக் கணிக்கிறது. கணிப்பின் முடிவுகள், புவியியல் இடநிலை யை - தீர்க்கரேகை மற்றும் அச்ச ரேகையாக தரப்படுகிறது.

4.ஏற்பியில், விவரண படம் காட் டும் காட்சி திரை இருந்தால், இட நிலை படத்தில் காட்டப்படும்.

5.நான்காவது துணைக்கோளிலி ருந்து சைகைகளை ஏற்க முடிந் தால், அச்சரேகை, தீர்க்கரேகை யோடு. குத்துயரத்தையும் ஏற்பி காட்ட முடியும்.

6.ஏற்பி வைத்துள்ளவர் நகரும் போது, பயணம் செய்யும் திசை மற்றும் வேகத்தை ஏற்பியால் கணிக்க முடியும். செல்லிடம் சேரும நேரத்தை கணிக்க இயலும்.

**மூவச்சாக்கம (Trilateration)**



மூவச்சாக்கம்

மூவச்சாக்க முறை: குறிப் பொருள்களின் சால்பு இடநிலை களை முக்கோண வடிவகணிதத் தைப் பயன்படத்தி அறியும் முறை. முக்கோணமாக்க முறையில் (Triangulation), குறிப்பொருளின் இடநிலையை அறிய தொலைவு களும் கோணங்களும் பயன்படுத் தப்படுகின்றன. மூவச்சாக்க முறை யில்,

1.இரண்டு அல்லது மேற்பட்ட பொருந்து புள்ளிகளுக்கிடையே உள்ள தொலைவு (தெரிந்த), மற றும்,

2.குறிப்பொருளுக்கும், பொருந்து புள்ளிகளுக்கும் இடையே உள்ள தொலைவும் (அளக்கப்பட்ட) பயன்படுத்தப்படுகின்றன. இரு பரி மாண சமதளத்தில் ஒரு புள்ளி யின் இடநிலையை அறிய, குறைந் தது மூன்று பொருந்து புள்ளிகள் தேவைப்படுகின்றன.

இதன் சித்தாந்தம் வட்டங்க ளின் வடிவகணிதத்தில் அடங்கி யுள்ளது. குறிப்பு புள்ளியின் தொலைவு ஒரு பொருந்து புள்ளி யிலிருந்து அறியப்பட்டால், அந்த் புள்ளி அத்தொலைவை ஆரமா கக் கொண்ட வட்டத்தில் எந்த இடத்திலும் இருக்கலாம். மேலும், இரண்டாவது பொருந்து புள்ளியி லருந்து ஒரு தொலைவில் குறிப்பு புள்ளி இருக்கிறதென்றால், அப புள்ளி மற்றொரு வட்டத்தில் இருக் கலாம். இவ்விரண்டு வட்டங்களும இரு புள்ளிகளில் முட்டுவதால், குறிப்பு புள்ளி இரண்டு புள்ளிக ளில ஒன்றாக இருக்கலாம். மூன்றா வது பொருந்து புள்ளியிலிருந்து குறிப்பு புள்ளிக்கு உள்ள தொலைவு மூன்றாவது வட்டத்தைப் படத்தில் கொண்டுவருகிறது. மூன்று வட் டங்களும முட்டுவது ஒரு புள்ளி யில தான்; அப்புள்ளியே மூன்று பொருந்து புள்ளிகளையும் சார்ந்த, குறிப்பு புள்ளியின் இடநிலை.

மேல் சொன்னதெல்லாம் குறிப்பு பொருள் ஒரு சமதளத்தில் இருக் கும் என்ற அனுமானத்தின் அடிப்ப டையில் தான்; அதாவது இருபரி மாண வெளியில் தான், முப்பரி மாண வெளியில் 4 பொருந்து புள ளிகள் தேவைப்படுகின்றன. குறிப்புப்புள்ளி, வட்டத்துக்குப் பதிலாக உருளையின் தளப்பர பில் இருக்கிறது. இந்த வேறுபாடு களைத் தவிர நுட்பம் அதுவே!

**GPS பயன்பாடுகள்!**

இடநிலைகளைக் கண்டறிவது மட்டுமல்லாமல், கப்பல்களையும், வமானங்களையும் வழி நடத்திச செல்ல (NaVIGATE), பாதையைச் சரிபார்க்க (Track) GPS உதவுகி றது.

சில நேரங்களில், மிகவும் சரி யான பொருந்து இடமறியும் கருவி, மிகவும் துல்லியமான விஞ்ஞா னப் பணி செய்யத் தேவைப்படு கிறது. எவர்ஸ்டு மலைச்சிகர த்தை எட்ட பெருமலைப்பாய் இரு கக, GPS வைத்து மலை வளர்த்து வருவதை எளிதில் க்ண்டறிந்துள் ளனர். GPS ஏற்பி சேகரித்த தரவு, முன்பு கண்டறிந்ததை வலுப்படுத் துவதோடல்லாமல், கும்பு பனி மலை எவரஸ்டு அடிவாரம் நோக்கி நகர, மலையே வளர்வதை உணர முடிகிறது.

இனத்தொகை குறைந்து, முற் றிலும் அழிந்தொழிந்து போகும் அபாயத்தில் இருக்கும் விலங்கினங் களின் இடப்பெயாவை கண் காணிக்கவும், இனத்தொகை பரப் புத் தோரணியை வைத்து நோய் மூலங்களை அடையாளம் காண வும், GPS பயன்படுகிறது. மோன் டானா மரைமான் (elk) மற்றும் மோகாவி பாலைவன ஆமைகள் மீது பொருத்தப்பட்ட GPS ஏற்பி கள வைத்து வனவிலங்கு மேலா ண்மை களத்தில் அரும்பணி நடந் துள்ளது.


அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுப வர்கள் GPS பயன்படுத்தி, ஆராய வதற்கான நிலம் மட்டும் நீத் தளங் களை இனங்கண்டு, குறிக்க முடி கிறது. குறிப்புகளை வைத்து, உப கரணங்களும் ஆட்களும் கிடை த்த பிறகு, முன்பு கண்டறிந்த தளங்களுக்கு செல்ல முடிகிறது.

இன்கிலிஷ் கால்வாய்க்கு அடியே குகைப் பாதை அமைக் கும் போது, பிரித்தானிய மற்றும் பிரஞ்சு கட்டடப் பணியர்கள் எதிர் முனைகளிலிருந்து தோண்ட ஆரம் பித்தனர். டோவர், பரித்தானியா விலிருந்து ஒன்றும், கலய்ஸ், பிரான்சிலிருந்து ஒரு அணியும். GPS ஏற்பிகளைக் கையாண்டு, தங் கள பாதையை சரிபார்த்துக் கொண்டனர். இதனால், சரியாக குகை நடுவே இரு பணியர் அணி களும் சந்திக்க முடிந்தது.

இல்லாவிட்டால், குகை கோண லாகப் போயிருக்கலாம்!

உயிர்காக்கும் பணியில் GPS அமைப்புக்கள் பெரும்பங்கு வகிக கின்றன. விபத்து நேர்ந்த இடங்க ளுக்கு தீயணைப்பு, காவல் படை மற்றும் மருத்துவ உதவி அணி களை அனுப்ப, விரைவாகத் திட்டமிட்டு செயல்பட, அவசர நிலை சேவை வழங்குபவருக்கு பேருதவியாக GPS திகழ்கிறது.

**GPS ஏற்பி**




இடநிலை பற்றிய கணிப்புக ளைச் செய்ய, GPS ஏற்பிக்கு தெரியவேண்டியவை:

1.தனக்கு மேல் சுற்றிவரும் துணைக் கோள்களில் மூன்றிலிருந்தாவது சைகையை ஏற்கும் பணி.

2.தனக்கும் துணைக்கோள்களுக கும் உள்ள தொலைவுகள். இதை அறிய GPS ஏற்பி, துணைக்கோள் களிலிருந்து வரும் உயர் அதிர் வெண், குறை - திறன் ரேடியோச சைகைகளைப் பகுத்தாய வேண டியுள்ளது. ரேடியோ அலைகள் மின்காந்த ஆற்றலுடையன. ஒளி யின் வேகத்தில், வினாடிக்கு 300,000 கி.மீ செல்வன (வெற்றிடத்தில் வேகம்). சைகைகள் துணைக் கோள்களிலிருந்து வந்துசேர எவ் வளவு நேரம் எடுக்கின்றன என் பதை வைத்து, ஏற்பியால் தொலை வைக் கண்கிட முடியும்.

**தொலைவை அளத்தல்**




வகையீட்டு பூகோள இடநிலையுணர்த்தும் அமைப்பு (DGPS)

GPS ஏற்பி, ரேடியோ சைகை துணைக்கோளிலிருந்து ஏற்பிக்கு வந்து சேரும் நேரத்தை வைத்து, துணைக்கோளுக்கும் தனக்கும் உள்ள தொலைவைக் கணிக்கி றது. குறிப்பிட்ட நேரத்தில் (நள் ளிரவில் என்று கொள்வோம்), துணைக்கோள் ஒரு நீண்ட இலக்க முறை தற்போக்குக் (Random Code) குறியீட்டை செலுத்துகிறது. ஏறபியும் அதே குறியீட்டை, அதே நேரத்தில் தொடங்கி, ஓட்டுகிறது. துணைக்கோள் சைகை ஏற்பியை வந்தடைந்தவுடன், துணைக் கோள அனுப்பிய தோரணி, ஏற்பி ஓட்டுகின்ற சைகைத் தோரணி யைக காட்டிலும் காலம் தாழ்ந்து இருக்கும். தாமதநேரம் (சுணக் கம்) சைகை பயணிக்கும் நேரம். ஏற்பி இந்த நேரத்தை ஒளியின் வேகத்தோடு பெருக்கினால் எத்தை தூரம் சைகை பயணம் செய்தது? என்று அறியலாம். நேர்க்கோட்டில் பயணித்தது என்றால், இதுவே ஏற் பிக்கும் துணைக்கோள்களுக்கும் உள்ள தொலைவு!

இந்த அளப்பைப் புரிய GPS ஏற்பியிலும், துணைக்கோளிலும் உள்ள கடிகாரங்கள் ஒரு நானோ வினாடி (1/1000, 000, 000 வினாடி) அளவுக்குள் ஒத்தியங்க வேண் டும். துணைக்கோளை அடிப்படை யாகக் கொண்ட இடநிலை அமை ப்பை, ஒத்தியங்கும் கடிகாரங்க ளைக் கொண்டு அமைக்க நமக்கு துல்லியமாகச் செயலாற்றும் நிலையான அணுவியல கடிகாரங் கள் துணைக்கோளில் மட்டுமல் லாது, GPS ஏற்பியிலும் தேவைப் படுகிறது. ஆனால், அணுவியல் கடிகாரங்களின் விலை $50,000 யிலிருந்து $100,000 க்குள் இருப்ப தால், அன்றாடம் பயன்படுத்தும் நுகர்வோர் மின்னணுவியல் கரு வியாக விளங்கும் GPS ஏற்பிக்கு ஏற்றதாக இருக்காது. இந்தச் சிக்கலுக்கு நல்ல தீர்வு உள்ளது. ஒவ்வொரு துணைக்கோளிலும் விலை உயர்ந்த, துல்லியமாக நேரத்தைக் கணிக்கவல்ல அணு வியல் கடிகாரம் உள்ளது. GPS ஏற்பியிலோ, அவ்வப்போது திரு த்திக்கொள்ளக்கூடிய, சாதாரண மான குவார்ஸ் படிகம் கொண்டு இயங்கும் கடிகாரம் தான உள் ளது. சுருங்கச் சொல்லின், ஏற்பி, நான்கு அல்லது மேல்பட்ட துணைக் கோள்களிலிருந்து பெறக்கூடிய சைகைகளை வைத்து, தன்னு டைய துல்லியமின்மையை எடை போடுகிறது; சரி செய்தும் கொள் கிறது.

இடநிலை நன்கு தெரிந்த நான்கு துணைக்கோள்களுக் கும், ஏற்பிக்கும் இடையே உள்ள தொலைவுகளை அளந்தபின், நான்கு கோளங்களை வரையலாம. இவை ஒரு புள்ளியில் முட்டுமாறு அமையும். தொலைவுகளை சரி யாக அளக்காவிட்டாலும், மூன்று கோளங்கள் ஒரு புள்ளியில் சந் திக்கும் வாய்ப்பு இருக்கலாம்! ஆனால், அளப்புகளின் பிழை இருந் தால், நான்கு கோளங்கள் ஒரு புள்ளியில் முட்டாது. நான்கு தொலைவுகளையும் அளக்க, ஏற்பி தன்னகத்தே உள்ள கடிகா ரத்தைப் பயன்படுத்துகிறது. எல் லாத் தொலைவுகளும் ஒரே விகி தாசார அடிப்படையில் பிழையாக இருக்கும்.

ஏற்பியால், நான்கு கோளங்க ளையும் ஒரு புள்ளியில் முட்டு மாறு செய்வதற்கு ஏற்ற திருத்தங களைக் கணிக்க முடியும். இதன் அடிபபடையில் துணைக்கோள்க ளில் உள்ள அணுவியற் கடிகாரத் தோடு ஒத்தியங்க, GPS ஏற்பி, அதன் கடிகாரத்தைச் சரி செய்கிறது. அதாவது, ஏற்பி, நேரம் பற்றிய தன னறிவை சரிசெய்து கொண்டு இருப்பதால், துல்லியத்தில் அணு வியற் கடிககாரத்தோடு ஒத்து விளங்குகிறது.

தொலைவு பற்றிய தகவல் பயனுள்ளதாக இருக்க, ஏற்பி, துணைக்கோள் எங்கு இருக்கிறது? என்று சரியாக அறிய வேண்டும். துணைக்கோள்கள் முன்பே அறி யப்பட்ட கோளரேகையில் பய ணிப்பதால் இது கடினமாக இருக் காது. GPS ஏற்பி, எந்த நேரத்திலும் எல்லாத் துணைக்கோள்களும் எங்கு இருக்கின்றன? என்ற தக வலைத் தன் தேக்கத்தில் வைத்தி ருக்கும். நிலவு மற்றும் கதிரவன ஈர்ப்பால் துணைக்கோள்களின் கோளரேகையில் லேசான மாற் றங்கள் உண்டாகும். ஆனால், பாது காப்புத் திணைக்களம் அவ்வப் போது துணைக்கோள்களின் இட நிலையில் ஏற்படும் சிறிய மாற்றங் களைக் கண்காணித்து, செய்ய வேண்டிய திருத்தங்களை எல்லா GPS ஏற்பிக்கும் துணைக்கோள் களூடாகவே அனுப்பி வைக்கி றது.

GPS அமைப்பு நன்றாக வேலை செய்து வந்தாலும், சில துல்லிய மின்மைகள் அவ்வப்போது தலை காட்ட நேர்கிறது. வளிமண்டலம ஊடாக வெளிவரும் ரேடியோச் சைகைகள், ஒரே சீரான வேகத் தில (ஒளியின் வேகத்தில்) வெளி வரும் என்ற அனுமானத்தை அடிப் படையாகக் கொண்டு தான் அமை ப்பு இயங்குகிறது. ஆனால், பூமி யின் வளிமண்டலம், மின்காந்த ஆற்றலை ஓரளவு மெதுவாக்கு கிறது. குறிப்பாக அயனிமண்டலத திலும், அடிவளிமண்டலத்திலும், இந்த மிதப்படுத்தம், அலைக ளுக்கு ஏற்படிகின்றது. எனவே, 'கால தாமதம் -சுணக்கம்' நாம் பூமியின் மீதுள்ள இடநிலை சார்ந தாக இருப்பதால், தொலைவு கணிப புகளில் இதை ஒரு காரணியாக கொண்டு வருவது கடினமாகிறது. வானாளவு பெரிய காட்டடங்களில பட்டு எகிரும் ரேடியோச் சைகை களால் சிக்கல்கள் உண்டாகின் றன. இதனால், துணைக்கோள்கள் இருக்கும் இயல்பு தொலைவைக காட்டிலும் அதிக தூரம் இருப்ப தாகத் தெரியக்கூடும்.

**இணையப்பார்வை**

வகையீட்டு (Differential) GPS இந்த பிழைகளைத் திருத்த உதவுகிறது.

இதன் அடிப்படை சத்தாந்தம் GPS இன் துல்லியமின்மையை, நிலைபெற்றுள்ள, அதன் இடம் நன்கு அறியப்பட்ட ஒரு ஏற்பி வைத்து கணிப்பது. வகையீட்டு GPS நிலையத்தின் வன்பொருள், தன் இடநிலை நன்கு தெரிந்த தால், தன் ஏற்பியின் துல்லியமின் மையை கணிக்கிறது. நிலையம், அதன் வட்டாரத்தில் உள்ள DGPS உபகரணம் பொருத்தப்பட்ட எல்லா ஏற்பிகளுக்கும், இடநிலைக கணிப் பில் செய்ய வேண்டிய திருத்தம் பற்றிய தகவலை ஒலிபரப்பகிறது. பொதுவாக, திருத்தம் பற்றிய தக வலை அணுகுவதால் வகையீட்டு GPS, சாதாரண GPS யைக் காட்டி லும் கூடிய துல்லியத்துடன் இட நிலையை உணர்த்துகிறது. □

# கைதிகள் உண்ணாவிரதம்; விசாரணைகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலை யில் கடந்த சனிக்கிழமை சிறைக கைதிகள் சிறைச்சாலையின் கூரைமீது ஏறிமேற்கொண்ட உண ணாவிரதப் போராட்டம் தொடர் பாக உடனடியாக விசாரணைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நுர்தீன் மசூர் தெரிவித்துள் ளார்.

அத்துடன், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற் றச்சாட்டுக்கள் குறிததும் உடன டியாக ஆராயப்படவுள்ளது.

கைதிகளின் குற்றச்சாட்டுக் கள், அவர்களின் உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்பாக சட் டமா அதிபருடன் சிறைச்சாலை ஆணையாளர் ஆலோசனை நடாத் தவுள்ளார்.

இவ் ஆலோசனையின் பின் இது தொடர்பான அறிக்கை நீதியமைச் சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப் படும். (ந-8)

# உணவுக் கட்டுப்பாடு இருந்தால்... வயதை வெல்லலாம்

பெரும்பாலான பெண்கள் தங்கள் உடல் தோற்றத்தை நினைத்துக் கவலைப்படுகிறார்கள். எப்படி இருந்தோம்... இப்போ இப்படி ஆகிவிட்டோம்... என்பது அவர்கள கவலை. ஆனால் ஒரு உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் உடலமைப்பு முற்றிலும் வித்தியாசமானது.

ஒவ்வொரு பெண்ணும் பிறக்கும் போதே கூடுதலான கொழுப்பு செல்களுடன் தான பிறக்கிறார். வளர்சிதை மாற்றம் எனப்படும் மெட்டாபோலிசம் ஆண்களைக் காட்டிலும் இவர்களுக்கு மெதுவாகவே நடக்கிறது. இதுதவிர ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டீரான் என வெவ்வேறு விதமான ஹார்மோன்களின் தாக்கமும் இருக்கிறது. இந்தக் காரணங்கள்ால் பெண்களுக்கு ஆயுட்காலம முழுவதும் உடல் எடை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறத. வயதைப் பொறுத்து உடம்பின் அனைத்துப் பாகங்களும் மாறவிடும். இதனல் தோல் மற்றும் உடல் எடையில் பெரிய வித்திய்ாசங்கள் உண்டாகும்.



ஆனால் உணவில் அக்கறை காட்டினால் காலத்தை வென்று உடம்பை அழகான தோற்றத்தில் வைக்கலாம். 30 வயதைத் தாண்டிய பெண்கள் கல்சியம், புரோட்டீன் விற்றமின் மற்றும் தனிம சத்துக்களை போதுமான அளவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இனால் எலும்புகள் வலுவாகும். தோல் பளபளக்கும். வறண்ட சருமம் மாறும். முடிகொட்டுதல் நின்றுவிடும். மொத்தத்தில் நீங்கள் இளமையான தோற்றத்தில் இருப்பீர்கள்.

சரி இந்தச் சத்துக்களால் என்னென்ன நன்மை கிடைக்கிறது என்று விரிவாகப் பார்ப்போம்

*கல்சியம் - பால் செயற்கை வெண்ணெய் மற்றும் பாலாடைக் கட்டி உள்ளிட்ட பண்ணைப் பொருட்களில் நிறைய உள்ளது. இதுதவிர சோயா, பால், சோய பீன்ஸ் அடர்த்தியான பச்சை நிறம் கொண்ட காய்கறிகள், ராகி போன்ற தானியங்கள் ஆகியவற்றிலும் தாராளமாக இருக்கிறது.

◆ விற்றமின் டீ சூரிய ஒளி மூலம் நிறைய கிடைக்கிறது. இந்தச் சத்து தோலுக்கு மிக மிக அவசியம். புகைப்பிடித்தல் மற்றும் மது பழக்கம் இருந்தால் உடனடியாக கைவிடுங்கள். ஏனெனில் இந்த இரண்டும் உடம்பில் இருந்த கல்சியம் சத்தை வடிகட்டிவிடும்.

◆ புரோட்டின் - சோயா மாவு கோதுமை மாவு மற்றும் தானியங்களில் இச்சத்து நிறைய இருக்கிறது.

◆ தானியங்கள் - கோதுமை சப்பாத்த ரொட்டிக்குப் பதில் ராகியைச் சாப்பிடலாம்.

◆ காய்கறிசாறுகள் - தோலை இளமையாகவும் மினுமினுப்பாக வைத்திருக்கும். மேலும் விற்றமின்களையும். தனிம சத்துக்களையும் உடலில் சேர்க்கும்.

1.சிவப்பு சாறு - தக்காளி, கரட், பீட்ருட் சாறுகள்

2.பச்சை சாறு - சுரைக்காய், தண்டுச் செடிகள் தினந்தோறும் பிரஷ்ஷாக 2 பழச்சாறுகளைக் குடிக்க வேண்டும் (ஆரஞ்சு, மாதுளை, பப்பாளி மற்றும் ஸ்ட்ராபெர்ரி)

உலர்ந்த பழங்களை 1 பிடி எடுத்துச் சாப்பிடுங்கள்.


தினந்தோறும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடியுங்கள். கொழுப்பு ,எண்ணெய், நெய் வெண்ணெய் ஆகியவற்றில் ஒரு நாளைக்கு 3 ஸ்பூன் பயன்படுத்தினால் போதும்.

இதையெல்லாம் முறையாகச் சாப்பிட்டு வந்தால் வயதை வெல்ல முடியும். எப்போது 16 வயதுப் பெண் போல் பளிச்சென இருப்பீர்கள.

**குறிப்பு:** எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு உடற்பயிற்சியை மறந்து விடாதீர்கள். உடற்பயிற்சிகளைத் தினந்தோறும் கட்டாயம் செய்ய வேண்டும். (ற)

# நீண்டகால இருமல்...

நீண்டகால இருமல் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கும் என்று மருத்துவ உலகினர் கூறியுள்ளனர். அமெரிக்காவின் மயோகிளினிக் கில் நீண்டகாலம் இருமலால் பாதிக்கப்பட்ட 146 நோயாளிகளை எடுத்துக் கொண்டு அவர்களது பிரச்சினைகள் லிஸ்ட்போடப்பட்டது.




அப்போது சமுதாயத்துடன் இணைந்து பழகுவதில் பிரச்சினை கோபம்- எரிச்சல், தூக்கமின்மை அடிக்கடி மருத்துவரை பார்க்க வேண்டி இருப்பது என பல பிரச்சினைகள் வெளிச்சத்துக்கு வந்தன.

தொடர்ந்து இருமிக்கொண்டிருப்பவர்கள், தங்களது வாழ்க்கைததுணை மற்றும் நண்பர்களால் வெறுக்கப்படுகிறார்கள். இரவில் தூக்கம் பிடிக்காமல் தவிப்பதால், பகல் நேரத்தில் களைப்பு, உடல் பருமன் ஆகிய சிக்கல்களும் உண்டாகின்றன.

நீண்டகாலம் சிகிச்சை எடுத்துக்கொள்வதில் பல நோயாளிகள் எரிச்சல் அடைகிறார்கள். மோசமான இருமலைப் பொறுத்தமட்டில் என்ன காரணம்? என்பதை ஒரே சோதனையில் சொல்லிவிட முடியாது. சிலநேரம் தீவிரமான பரிசோதனைகளுக்குப் பிறகும்கூட பிரச்சினையை கண்டுபிடிக்க முடியாது.

நாட்பட்ட இருமல்காரர்களுக்கு உளவியல் மற்றும் உடலியல் ரீதியான பிரச்சினைகள் அதிகரிப்பதால் மருத்துவமனைக்கும்- வீட்டுக்கும் நடைய்ாய் நடக்க வேண்டி வருகிறது. இத்தகைய காரணங்களால் அவர்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து போகிறது என்று ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது. (ற)

# சிரித்த முகம் இருந்தால்... நீண்ட ஆயுள் வாழலாம்!



வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பது உண்மையோ. அதே அளவுக்கு சிரித்த முகம் இருந்தால் நீண்ட நாள் வாழலாம் என்பதும் உண்மை.ஒருவருக்கு சிரித்த முகம் எப்போது அமையும்? மனதில் எந்த கவலையுமில்லாமல், மன இறுக்கம் இல்லாமல், நிம்மதியாக இருக்கும் போதுதான் முக மலர்ச்சி வரும். மன அழுத்தம் குறையும் போது இருதய இரத்த நாளங்கள் இயல்பாக இருக்கும் திறமையாக செயற்படும். அப்போது தானாகவே ஆரோக்கியம் கைகூடி விடும். முக மலர்ச்சியுடன் இருக்க இதோ சில டிப்ஸ்.

1. உங்களைப்பற்றி குறைத்துப் பேசுவதை நிறுத்துங்கள். அதற்குப்பதில் சார்பான விஷயங்களைத் தேடுங்கள்.

2. மனைவி அல்லது கணவனுடன் தகராறு வருகிறதா? எரிச்சலூட்டும் சம்பவங்கள் நடக்கிறதா? அப்படியானால் பதிலுக்கு எரிந்து விழாமல் அவர்களை உங்கள் பக்கம் கவர்ந்திழுப்பதில் கவனம் செலுத்துங்கள்.

3. நீங்கள் என்ன வேலை பார்த்தாலும் சரி அதில் மகிழ்ச்சியைத் தேடுங்கள். அதனால் திருப்தி தானாகவே கிடைக்கும்.

# பச்சிளம் குழந்தைகளை அழ வைக்கும் வயிற்று வலி

பிறந்த சில வாரங்களே ஆன பச்சிளம் குழந்தைகள்அடிக்கடி வயிற்று வலியால் பாதிக்கப்படுகின்றனர் அழுது அழுது முகம் எல்லாம் சிவந்து போகும்.

குழந்தையைச் சமாதானப்படுத்த தாயார் என்னதான் முயற்சி செய்தாலும் அழுகை நிற்காது. இதனால் அடுத்து என்ன செய்வது என்று தாய்மார்கள தவிப்புக்கு ஆளாகிறார்கள.

இந்நிலையில் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் அலர்ஜியை உண்டு பண்ணும் உணவுகளைத் தவிர்த்தால் குழந்தைகள் வயிற்று வலியால் துடிப்பது குறையும் என்று ஆய்வு மூலம் தெரிய வந்துள்து.

இந்த ஆய்வில் பிறந்து 6 வாரங்கள் ஆன (வயிற்று வலியுள்ள) குழந்தைகளும் அவர்களின் தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் 90 பேரும் பற்கேற்றனர்.

முதலில் குழந்தைகளின் அழும் தன்மை, நேரம் தாய்மார்கள் சாப்பிடும உணவு ஆகியவற்றைக் குறித்துக் கொண்டனர். பின்னர் பாதி தாய்மார்கள் முட்டை, பசும்பால், வேர்க்கடலை சோயா, மீன் கோதுமை ஆகியவற்றை உணவில் தவிர்க்குமாறு கூறப்பட்டனர்.

மீதியுள்ள தாய்மார்கள் இந்த உணவுகளை வழக்கம் போல சாப்பிட்டு வருமாறு கூறப்பட்டனர் 10 நாட்கள் கழித்து குழந்தைகளின்வயிற்று வலி எப்படி இருக்கிறது? என்று ஆராயப்பட்டது.

அதில் அலர்ஜியை உண்டு பண்ணும் உணவுகளைத் தவிர்த்த தாய்ப்பாலூட்டும் தாய்மார்களின் குழந்தைகளில் 74 சதவீதம் பேருக்கு அழுகை குறைந்து (25 சதவீதம்) இருந்தது. அதே நேரம் எந்த மாற்றமும் இல்லாமல் உணவுகளைச் சாப்பிட்ட தாய்மார்களின் குழந்தைகளில் 37 சதவீதம் பேருக்கு மட்டுமே இதுபோன்ற பலன் கிடைத்தது.



எனினும் தாய்மார்கள் தாங்களாகவே உணவு முறையில் மாற்றம் செய்யக் கூடாது. எது செய்வதாக இருந்தாலும்மருத்துவரின்அறிவுரையுடனசெயல்படுவதே நல்லது (ற)

# வலிப்புநோய் வராமல் தடுக்க ஆலோசனைகள்

**மனிதர்களைத் தாக்கும் பயங்கர வியாதிகளில் வலிப்பு நோயும் ஒன்றாகும். சிறுவயதினர் தொடக்கம் வயது வந்தோர் ஈறாக இந் நோய் தாக்குகிறது. சிறுபிள்ளைகளுக்கு வலிப்பு ஏற்படும்போது மிக அவதானமாக இருக்கவேண்டும். இந்நோய்தாக்கும் குழந்தைகள் சில சமயங்களில் நோயின் உக்கிரத்தால் தங்கள் நாக்கு உதடுகளை கடித்தலும் உண்டு. ஆரம்பத்திலேயே இந்நோய்க்கான சிகிச்சைகளை பெற்றால் கட்டுப்படுத்த இயலும்.**

**இந்நோய் பற்றிய சகல விபரங்களையும் கேள்வி-பதில் முறையில் விளக்குகிறார் டாக்டர் சி.யமுனாநந்தா.**

**கேள்வி:**- வலிப்பு நோய் எவ்வாறு ஏற்படுகின்றது?

**பதில்:**- மூளையில் உள்ள நரம்புக்கலங்களில் உள்ள மின்னழுத்தம் பல மின்பற்றரிகள் போன்றது. இவை இயற்கைக்கு மாறாக தூண்டப்படுவதால் ஏற்படும் கணத்தாக்கம் தசைக் கலங்களை இயக்கும்போது



வலிப்பு ஏற்படும்.

**கேள்வி:**- வலிப்பு நோய்களின் வகைகள் எவை?

**பதில்:**- எளிய பகுதி, சிக்கலான பகுதியென இது இருவகைப் படும். எளிய பகுதியானது இதில் நினைவு இருக்கும் மூளையின் இயக்கப் பகுதியில் கணத்தாக்கங்கள் ஏற்படின் வலிப்பு ஏற்படும். உணர்வுப் பகுதியில் ஏற்படின் வெவ்வேறு உணர்வு மாற்றங்கள் ஏற்படும். தன்னியக்க நரம்புத் தொகுதியில் ஏற்படின் சிறுநீர் போதல், மலம் போதல் ஏற்படும். மேலும் மூளையின் உட்பகுதியில் ஏற்படும் போது உளவியல் மாற்றங்கள் ஏற்படும்.

சிக்கலான பகுதியானது ஆரம்பத்தில் நினைவு இருக்கும் பின் நினைவு இழப்பு சில நிமிடங்களிற்கு இருக்கும். இரண்டாவது முழுமையானது. இதில் நினைவு இழப்பு சில நிமிடங்களிற்கு ஏற்படும்.

**கேள்வ:**- வலிப்பு உருவாகும் போது ஏற்படும் அறிகுறிகள்?

**பதில்:**- நாக்கினை நக்கல், மெல்லல், விழுங்கல், உமிழ் நீர் சுரத்தல் என்பன தன்பாட்டிலேயே ஏற்படும். கட்டுப்படுத்தமுடியாத நடவடிக்கைகள் இருக்கும். அரை குறைத் தேவையான விழிந்த பார்வை இருக்கும். பிடித்தல் சட்டையை இழுத்தல் இருக்கும்.

**கேள்வி:**- வலிப்பு நோய் ஏற்படக்காரணங்கள் யாவை?

**பதில்:**- பரம்பரையலகுகள் செல்வாக்கு செலுத்தலாம். சிறு வயதில் அல்லது பிறக்கும் போது மூளையில் காயமேற்படுவதால் ஏற்படலாம்

புதிதாக மூளையில் கட்டிகள் உருவாகும் போதும் ஏற்படலாம். சிறுபிள்ளைகளில் காய்ச்சல் ஏற்படும்போது வலிப்பு ஏற்படலாம். மூளையை கிருமிகள் தாக்கும் போது ஏற்படலாம். சில மருந்துகளை பாவித்து, விட்டு விடும் போது ஏற்படலாம். இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும் போது ஏற்படலாம்.

**கேள்வி:**- எல்லாக் காரணங்களையும் குணப்படுத்த முடியுமா?

**பதில்:**- இல்லை CT Scan, mri Scan, EEG மற்றும் இரத்தச் சோதனைகள் செய்து மாற்றக் கூடிய காரணிகள் இருப்பின் சிகிச்சை அளிக்க வேண்டும். அன்றேல் வலிப்பைத் தடுக்கும் சிகிச்சையினை அளிக்க வேண்டும்.

**கேள்வி:**- வலிப்பு நோய்க்கான முதலுதவி யாது?

**பதல்:**- 1. நோயாளியை ஆபத்தான இடத்தில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு மாற்றல் (பொதுவாக இவர்கள் கிணறு, நீர் நிலைகள், நெருப்பு உயரமான இடங்கள், வாகனம் ஓடுதல் என்பவற்றை தவிர்க்க வேண்டும்)

2. சுவாசப்பாதையை சீர் செய்யவேண்டும். வாயினுள் இரும்பை வைக்கக்கூடாது. பொதுவாக நாக்குக்கடிபடல் வலிப்பின் ஆரம்பத்தில் ஏற்படும் ஒருவர் வலிப்பினால் அவதிப்படும் போது, அதன்பின் வாயினுள் எதையும் வைப்பதனால் பயன் இல்லை.

3. 5 நிமிடத்திற்கு பின் வலிப்பு நீடிக்குமாயின் வைத்திய உதவியை நாடவேண்டும்.

**கேள்வி:**- வலிப்பு நோய் ஏற்பட்டவரில் ஏற்படக்கூடிய அசாதாரண நிலைகள் எவை?

**பதில்:**-1. வலிப்பு நோய் ஏற்படக்காரணமான உடல் நோய்களால் ஏற்படும் மாற்றங்கள் உதாரணமாக மூளைவிருத்தி குறைவாகக் காணப்படலாம். பொதுவான கற்றல் மாணவரில் காணப்படலாம். ஆனால் எல்லோரிலும் அல்ல.

2.வலிப்பு ஏற்படும் போது மாற்றங்கள் ஏற்படுத்தும் அசாதாரண நிலைகள் உதாரணமாக நினைவு தெளிவின்மை.

3. வலிப்பு நோயுடன் தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் நடத்தை மாற்றம், கோபப்படல், உள நோய்நிலை என்பன ஏற்படலாம்.

**கேள்வி:**- வலிப்பு நோய்க்குரிய மருத்துவச் சிகிச்சை எத்தகையது?

**பதில்:**- பொதுவாக ஒரு மருந்து பாவிக்கப்படும். இரண்டு மருந்திற்கு மேல் பாவிக்கக்கூடாது.

**கேள்வி:**- எப்போது மருந்துச் சிகிச்சையினை கைவிடலாம்,

**பதில்:**- கடைசியாக வலிப்பு வந்து 2-4வருடங்களில் படிப்படியாக மருந்தினைக்குறைத்து 6 மாதங்களில் நிறுத்தமுடியும்.

**கேள்வி:**- மகப்பேற்றுற்கும் வலிப்பு நோயிற்கும் தொடர்பு?

**பதில்:**- வலிப்பு நோயுள்ள

**டாக்டர் சி.யமுனாநந்தா**

வர்கள் உட்கொள்ளும் மருந்துகள் கருத்தடை மாத்திரைகளின் செயற்திறனைக்குறைக்கும். எனவே வலிப்பு நோயுள்ளவர்கள் இதில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

வலிப்பு நோயிற்கு பாவிக்கும் மாத்திரைகள் போலிக்கமிலத்தினை பயன்படுத்துவதால் கருத்தரிப்பிற்கு 2 மாதங்களிற்கு முன்பே. போலிக்கமிலத்தை உள்ளெடுப்பதால் உருவாகும் சிசு ஆரோக்கியமாக அமையும்.

## கதிர்காமரின் இடத்திற்கு எவரும் தெரிவுசெய்யப்படவில்லை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து ஏற்பட்டுள்ள பாராளுமனற உறுப்பினருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இதுவரை எவரும் தெரிவுசெய்யப்படவில்லையென்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிக்காக பலரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் கதிர்காமர் நாட்டிற்காக ஆற்றியசேவைகளை கவனத்தில் கொண்டு அவரது மனைவிக்கு இந்தப் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

இவரைவிட டவஷ் அழகப்பெரும உட்பட வேறு சிலரது பெயர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நேற்று நடைபெறவிருந்த கட்சி உறுப்பினர்களின் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

## இராசி பலன்

13.12.2005
(கார்த்திகை28, செவ்வாய்க்கிழமை)
திரயோதசி முன்னிரவு 09.57மணிவரை
பரணி முற்பகல் 9.19மணிவரை
இராகுகாலம் 3.20-4.50 மணிவரை
சுபநேரம்11.50-12.20 மணிவரை
பிரதேச விரதம்
கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, குடும்பக்கவலை. |
| இடபம் | புதிய முயற்சி, திடீர்நன்மை, தெய்வ சிந்தை, நல்ல வரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுபசெலவு, முயற்சி கைகூடும், பிரயாணம். |
| கடகம் | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வ நம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்த காரியம் கைகூடும், மேன்மை, பிறர் உதவி. |
| கன்னி | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக்குறைவு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசன சுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, காரியதாமதம், திடீர் நன்மை, ரோகநிலை. |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர் உதவி, குடும்பசுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## நிதிபெறுவதற்குத் தடை

கலாசார முக்கோணப் பிரதேசத்திற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளால் கிடைகக வேண்டிய நிதியை சில தனியார் நிறுவனத்தினர் தடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா முக்கோண மையங்களைப் பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளிடம் விநியோகிக்கும் அனுமதிச் சீட்டுகளுக்கு பெறுமதி சேர்வரி அறவிடப்படுகிறது.

எனினும் இந்த நிதியைத்திரட்ட இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்கு 169 மில்லியன் ரூபா கிடைக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## வாகன விபத்தில் மூவர் பலி

குருணாகல் யக்களைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 12மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து ஒன்றுடன் வான் மோதியதால் வானில் சென்ற மூவர் மரணமாகியதோடு ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# இலங்கை - இந்திய கடற்படை இணைந்து கூட்டு கடற்பயிற்சி

## கொழும்பு கடற்பரப்பில் அடுத்த வாரம் ஆரம்பம்

இலங்கை கடற்படையினரும், இந்திய கடற்படையினரும் இணைந்து பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் இந்தப் பயிற்சிக்காக இந்தியக் கடற்படையிருக்குச் சொந்தமான மூன்று பயிற்சிக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையவுள்ளன. இந்தப் பயிற்சிகளுக்கு ஸ்ரீலங்கா கடற்படையினக்குச் சொந்தமான 5 பயிற்சிப் படகுகளும் 2 கரையோரப் பாதுகாப்புப் படகுகளும், சயூர மற்றும் சமுத்திர ஆகிய கப்பல்களும் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கொழும்புக் கடற்பரப்பில் நடைபெறவிருக்கும் பயிற்சிக்கு இந்தியாவுக்குச் சொந்தமான உலங்குவானூர்திகள் மற்றும் கடலிலும் பயணிக்கக் கூடிய வானூர்திகள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையவுள்ளன.

இலங்கை வரவிருக்கும் இந்தியத் தளபதிகளைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோடபாய ராஜபக்ச மற்றும் முப்படைத் தளபதி தயாசந்தகிரி ஆகியோர் வரவேற்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவை கடந்த வாரம் சந்தித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோடபாய ராஜபக்ச இந்தப் பயிற்சி குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பயிற்சிகளில் கலந்துகொள்வதற்காக இந்தியக் கடற்படை உயர் அதிகாரிகள் இவ்வார இறுதியில் கொழும்பை வந்தடையவிருப்பதாகவும், இவ்வாறான பயிற்சிகள் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவினை வலுப்படுத்த முடியுமென இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தியக் கடற்படையினருக்கும், இலங்கை கடற்படையினருக்குமிடையில் நடைபெறவிருக்கும் கூட்டுப்பயிற்சியை கண்காணிப்பதற்கு இலங்கை வான்படையினரும் பயன்படுத்தப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ற)

# இராணுவ உளவுப்பிரிவை பலப்படுத்த உளவுப்பணியில் தனியார் எஜெண்டுகள்!

## -'சண்டே ஒப்ஸேவர்' பேட்டியில் சரத் பொன்சேகா

விடுதலைப் புலிகளின் தாக்குதல் திட்டத்தை முன்கூட்டியே அறிந்து தடுக்கும் வகையில் உளவுப் பணியில் தனியாரை ஈடுபடுத்த இராணுவம் முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா 'சண்டே ஒப்ஸேவர்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், இலங்கையில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே 2002முதல் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்து வருகிறது.

இருப்பினும் இதுவரை இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 40க்கும் மேலான புலனாய்வு அதிகாரிகள். பல்வேறு தாக்குதலில் பலியாகியுள்ளனர். தற்போதுள்ள கொமாண்டர்களால் போராளிகளின் தாக்குதல் சதித்திட்டத்தை முன்கூட்டியே உளவு அறிந்து இராணுவத்துக்கு தகவல் அனுப்ப இயல்வில்லை. மேலும் தாக்குதல் சம்பவம் நடந்த பிறகுதான் அவைபற்றிய தகவல்கள் கிடைக்கின்றன.

இந்நிலையில் இராணுவத்தின் உளவுப் பிரிவை பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே இராணுவ உளவுப் பணியில் தனியார் ஏஜெண்டுகளை நியமிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலண்டன் எண்ணெய்க்கிணறு தொடர் குண்டுவெடிப்பு தீவிரவாதிகளின் சதிவேலை? விசாரணைகள் ஆரம்பம்

(இலண்டன)

இலண்டன் எண்ணெய்க் கிணறு குண்டு வெடிப்பில் 10பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது. எண்ணெய்க் கிணறு தொடாந்து எரிகிறது. எண்ணெய்க கிணறு மேலே தீவிரவாதிகள் மர்ம விமானம் பறந் ததாகவும் பரபரப்பான தகவல் வெளியாகி யுள்ளது.

இலண்டனில் பன்ஸ்மீல்டு விமான நிலையம் அருகே உள்ள எண்ணெய் கிடங்குகள் நேற்று முன்தினம் அடுத்தடுத்து 4 முறை வெடித்தது. அந்த எண்ணெய்க் கிணறுகள் பயங்கரமாகத் தீப்பிடித்தன. அதன் அருகே உள்ள கட்டடங்களும் தீப்பிடித்தன. ஏராளமான கட்டடங்கள் இடிந்துவிழுந்தன.


எணணெய்க் கிணறுகள் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியானது. ஆனால், அதை இலண்டன் பொலிஸார் மறுத்தனர் இது வெடி விபத்துதான் என்று கூறியுள்ள பொலிஸார் இது தீவிரவாதிகளின் சதித் திட்டம் இருப்பதை மறுப்பதற்கில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.



குண்டுவெடிப்பின் அதிர்வால் பன்ஸ்பீல்டு அருகே ஆதாரமின்றி அந்தரத்தில் தொங்கும் வர்த்தகக் கட்டடத்தையும் விண்ணைப்பிளக்கும் சத்தத்துடன் வெடித்த குண்டினால் பெற்றோல் சேமிப்புக் கிடங்குக்கு அருகே சிதறிக்கிடக்கும் மற்றொரு வணிக வளாகக் கட்டடத்தையும் பஞ்சப்பவுல் தெருவில் உருக்குலைந்துள்ள காரை யும் படங்களில் காணலாம்.







200அடி உயரத்துக்கு எண்ணெய்க் கிணற்றில் தொடர்ந்து தீ எரிந்தது. தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர். வெடித்துச் சிதறும் எண்ணெய்க் கிணற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் இருந்து 20ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.


எண்ணெய்க் கிணறுகள் வெடித்துச் சிதறியதிலும், தீயில் கருகியும் 10பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. 53பேர் உடல் கருகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பனஸ்பீல்டு விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இலண்டன ஹிக்ரு விமான நிலையம் அருகேயும் புகை மண டலமாக காட்சிஅளிப்பதால் அங்கிருந்து செல்லும் விமானங்களும் நேற்று தாமத



மாகப் புறப்பட்டுச் சென்றன.

இது தீவிரவாதிகளின் தாக்குதல் தான் என்று ஹெர்ட்போர்டுஷைர் மக்கள் கூறியுள்ளனர். எண்ணெய்க் கிணறு தீப் பிடிபபதற்கு முன் அதன் மேலே ஒரு மர்ம விமானம் பறந்து சென்றதாகவும் அதில் இருந்து தீவிரவாதிகள் வெடிகுணடுத்



தாக்குதல் நடத்தியதாகவும் அந்தப்பகுதி மககள் தெரிவித்துள்ளனர். இது பறறியும் பொலிஸார் விசாரணை நடத்திவருகிறார் கள்.

குண்டு வெடிப்பு நடந்த பகுதிகளை இங்கிலாந்து துணைப் பிரதமர் ஜான் பிரஸ்காட் பார்வையிட்டார். (ற)

## டாக்காவில் மீண்டும் குண்டுவெடிப்பு நாடுமுழுவதும் பொலிஸார் உஷார் நிலையில்

(டாக்கா)

பங்களாதேஷ் டாக்காவில் அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு குண்டு வெடித்தது. இதுதவிர, டாக்காவில் இருந்து 80கி.மீ.தொலைவில் மற்றொரு குண்டு கண்டெடுக்கப்படடது. நாடு முழுவதும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த ஆகஸ்ட் மாதம் இஸ்லாமிய தற்கொலைப்படை தீவிரவாதிகள் தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்தினர். இதில் நீதிபதிகள், வக்கீல்கள், பொலிஸ் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட 30பேர் கொல்லப்பட்டனர். 150கசும் மேற்பட்டவர்கள் படுகாய மடைநதனர். இது தொடர்பாக 700க்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக கப்பட்டு வருகின்றனர். இந்த விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் விடுதலையான 34ஆவது ஆண்டு விழா கொண்டாட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. விடுதலை தின கொண்டாட்டங்களைச் சீரழிக்கும் பொருட்டு சனிக்கிழமை நள்ளிரவு தலைநகர் டாக்காவின் இதயப் பகுதியான அரசின் முக்கிய அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் சிறிய குண்டுவெடித்தது. இதில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

இதுதவிர டாக்காவில் இருந்து 80கி.மீ. தொலைவில் உள்ள தொழில் நகரமான நார்சிங்டியில் வெடிக்காத நிலையில் இருந்த ஒரு வெடிகுண்டு கண்டுபிடிக்கப் பட்டது. இதனால், நாடுமுழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான திரிபுராவில், திரிபுரா தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி தீவிரவாத செயல்களில் ஈடுபடும் நியான்பாசி ஜமாதியா என்ற தீவிரவாதியை பங்களாதேஷ் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வடகிழக்கு எல்லை வழியாக பங்களா தேஷில் நுழைந்த நியான் பாசி கோமோல் கஞ்ச் என்ற மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டான். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப்படைகள் தங்கி இருக்கும் பகுதியில் நேற்று முன்தினம் பயங்கர வெடிகுண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் கந்தகாரின குடியிருப்புப் பகுதி ஒன்றில் அமெரிக்கப் படைகள் மற்றும் வெளிநாட்டு உதவிக் குழுக்கள தங்கியுள்ள முஸ்லிம் நாடான ஆப்கானில் ஞாயிற்றுகிழமை வேலை நாளாகும். பரபரப்பான காலை நேரத்தில் காரில் வேகமாக வந்த தற்கொலைப படை தீவிரவாதி ஒருவன் அமெரிக்கப் படைகளின் முகாம் அருகே வந்ததும் வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

கார் வெடிகுண்டுத்தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து சிறிது தொலைவில் காந்தகார் கவர்னரின் அலுவலகம் உள்ளது. நகரின் மையப்பகுதியில் நடந்த இந்த தாக்குதலின் சேதம் குறித்த முழுவிபரம் வெளியாகவில்லை. (ற)

## பப்புவா நியூகினியாவில் நேற்று நிலநடுக்கம் வீடுகள் அதிர்ந்தன; சுனாமி பீதியில் மக்கள்

(போர்ட் போர்சிபி)

அவுஸ்திரேலியா அருகே உள்ளது பப்புவா நியூகினியா. குட்டித்தீவுகளான பப்புவா நியூகியாவில் ஏரளமான மலைப பகுதிகளும் உள்ளன.

இந்த குட்டித்தீவின் தலைநகர் போர்ட போர்சிபி நகரில் இருந்து 395கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வட கிழக்கு பகுதியில திடீரென்று நிலநடுக்கம் ஏற்றப்பட்டது.

இந்த நில நடுக்கம் 6.5 ரிக்டர் அளவாக பதிவானது. நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 6மைல் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க அவுஸ்திரேலிய பூகமபவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நில நடுக்கம் ஏற்பட்டதில் அந்தப் பகுதியில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்தன. ஒரு சில வீடுகளில் விரிசல் ஏற்பட்டது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. உயிர் இழப்பும் ஏற்படவில்லை.

ஆனாலும், சுனாமி பேரலைகள் ஏற்படலாம் என்ற பீதியில் கடலோரப் பகுதியில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினார்கள்.

கடந்த 1998ஆம் ஆண்டு இதே தீவில் ஏற்றப்பட்ட சுனாமி தாக்குதலில் 2,000க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)




சீனாவின் ஹாங்காங் நகரில் உலக வர்த்தக அமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அதன் எதிர்ப்பாளர்கள் வறுமையை விளக்கும் சிற்பங்களுடன் ஊர்வலம் நடத்தினார்கள்.

காலபலம் அறிந்து இடமறிந்து ஒரு சொல்லைச் சொன்னால் அது புகழ் தரும்; வெற்றிபெறும்

- சுவாமி இராமதாஸர்

வலம்புரி

## நோர்வேயின் நிபந்தனை நியாயபூர்வமானதே!

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணைப் பணியை மேற்கொள்வதாயின், யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசில் அங்கம்பெறும் கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நோர்வே கூறியுள்ளது. இலங்கையின் பரிதாபத்திற்கு இரங்கி சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணைப் பணியை மேற்கொண்ட நோர்வேயை போடுதடியாக ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற கட்சிகள் கருதிக்கொண்டன.

இதனால் நோர்வேக்கு ஏற்பட்ட கௌரவ நட்டங்கள் ஏராளம். நோர்வேயின் தேசியக் கொடியினை புத்தபிக்குகள் எரித்தனர்.

உள்நாட்டு விவகாரங்களில் நோர்வே தலையிடுவதாக ஜே.வி.பி. கொக்கரித்தது. இவற்றின் மத்தியிலும் சமாதானம் ஏற்படவேண்டுமென்ற உயரிய காரணத்திற்காக நோர்வே தனது அனுசரணைப் பணியை மேற்கொண்டது.

இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்துவதில் அரசு தயக்கம் காட்டியபோது பேச்சுகள் நின்று போயின.

தற்போது பதவியேற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயின் அனுசரணையை எதிர்த்தார். நோர்வேயின் அனுசரணைப் பணி தேவையற்றதென ஜே.வி.பியுடன் சேர்ந்து கூறிய மகிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற சில அசம்பாவிதங்களை அடுத்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தனக்கு ஆபத்து ஏற்படுகின்றபோது, சமாதானம் சிதைவதாக மக்கள் கருதுகின்றபோது அதனைத் தடுப்பதற்காக நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு மகிந்த அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பானது தற்காலிகமானது. இதற்குள் தந்திரமுள்ளது. ஏற்கனவே கூறியவற்றிற்கும் இதற்கும் இடையில் இருக்கக்கூடிய வித்தியாசங்கள் சுயலாபத்தின் வடிவங்கள்.

இதனை நோர்வே அரசு துல்லியமாக உணர்ந்துள்ளது. இதன் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக நோர்வே இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

இந்நிபந்தனையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரச தரப்பில் அங்கம்வகிக்கும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமாதான முயற்சியில் அனுசரணைப் பணியை மேற்கொண்ட நோர்வே முதற்தடவையாக இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

நோர்வே இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகிறது. நோர்வேயின் அனுசரணை தேவையில்லை என்றெல்லாம் வீறாப்புப் பேசியவர்களுக்கு நோர்வே இப்பொழுது தலையடி கொடுத்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராகப் பங்குபற்றும் தேவை நோர்வேக்கு இல்லை. இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும். அதன்மூலமாக மனித உயிர்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்ற உயரிய நோக்குடனேயே அனுசரணைப் பணியை நோர்வே மேற்கொண்டது.

இதனைத் தவறாகப் புரிந்தால் நாம் மட்டும் இறுமாப்பு காட்டத்தெரியாதவர்கள் அல்ல என்பதுபோல நோர்வே இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

நோர்வேயால் விதிக்கப்பட்ட நியாயபூர்வமான நிபந்தனையால் உண்மை ஓரளவேனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனலாம்.

# பிரபாவை சந்தித்துப்பேச ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்

## தபால் அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தகவல்

(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மஹிந்த ராஜபக்ஷ விரைவில் ஆரம்பிப்பார் என தபால் தொலைத தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜயரட்ண நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளை திறன்மிக்கதாக ஆரம்பிக்கவேண்டும் என ஜனாதிபதி விரும்புகின்றார். அதனடிப்படையிலேயே விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த தீர்மானித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழலில் சமதானப் பேச்சுவார்த்தை முடங்கிக்கிடப்பதையும், நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்தி, வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையும் விரும்பாத ஜனாதிபதி அனுசரணையாளர் பணியினை தொடர்ந்து மேற்கொள் ளுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்தார்.

அதனை நோர்வே ஏற்றுக்கொண்ட போதும் நிபந்தனையின் அடிப்படையிலேயே அனுசரணைப் பணியை தொடர்ந்தும் மேற்கொள்ள நோர்வே அரசு திட்டமிடடுள்ளது.

இதனை ஜனாதிபதி வரவேற்றுள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர். அந்நிபந்தனைகளை விரைவில் தெரியப்படுத்துமாறு நோர்வேயிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகள் குறித்தும், ஜனாதிபதி மீது எதிர்க்கட்சி குற்றம் சுமத்துவது சம்பிரதாய பூர்வமான அரசியல் இலாபம் கருதியே எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ந-4)

# பழையவர் ஒதுக்கிய நிதியை புதியவர் தடுத்து நிறுத்தினார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின காலத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் ஒன்றின் பேரில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து அனுப்பிவைக்கப் படடிருந்த ரூபா.600மில்லியன் வரையிலான காசோலைகள் கடந்த வாரம் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் 'கொடுப்பனவு' நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தொகையை 'ஜனாதிபதி கலாசார, விளையாட்டு நிலைய நம்பிக்கை நிதியத்திற்கு' மாற்றி விடுமாறு ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாளான நவமபர் 16ஆம் திகதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி இத்தொகை நம்பிக்கை நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

இததினத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக கலாசார, விளையாட்டு நிலையக் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டிருந்தது. இந்த நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபகராக சந்திரிகா குமாரதுங்கவும், ஏனைய நம்பிக்கை பொறுப்பாளர்களாக முனனாள் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சித்ரா அத்துருகிரிய (இவர் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளராக பணியாற்றியவர்), பிரதியமைசசர் அர்ஜுன ரணதுங்க, சுசந்திகா ஜயசிங்க, முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் தாராடீ மெல் ஆகியோரும் உள்ளனர்.

இந் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட காசோலைக்கான கொடுப்பனவை நிறுத்துமாறே ஜனாதிபதி மஹிந்த உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ஓய்வுபெற்ற ஜனாதிபதியின் அலுவலக விவகாரங்களை கவனிப்பதற்கென வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 29.9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி டீ.பீ. விஜயதுங்கவுக்கு ரூபா 6.6 மில்லியன் ரூபா ஆண்டு தோறும் ஒதுக்கப்பட்டு வருகிறது.

இதனை சுட்டிக்காட்டிய உச்சநீதிமன்றம் தனது அனைத்து நீதியரசர்களுக்குமான ஒதுக்கீட்டிலும் இது அதிகமானது என கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-6)

# விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு சந்திப்புக்களையும் நடத்த வேண்டாம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் படைத்தரப்புக்கு உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு சந்திப்பையும் மேற்கொள்ளவேண்டாமென அனைத்து பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான எந்தவொரு சந்திப்பும் அரசியல் மட்டத்தில் அல்லது குறித்த விடயங்கள் தொடர்புடைய அரச அதிகாரிகளின் மட்டத்திலேயே இடம்பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளுடன் சந்திப்புக்களை நடத்துவது படையினரின் பணி அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் புலிகளுக்கும் உளளூர் மட்ட இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் பலமுறை சந்திப்புகள் இடம்பெற்றிருந்தன என்பதுடன் இந்தச் சந்திப்புக்கள் மூலம் உள்ளூர் பிரச்சினைகள் சில தீர்த்தும் வைக்கப்பட்டிருந்தன.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட அரசியபல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதிக்கும் யாழ்ப்பாண இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பொன்றை கண்காணிப்புக்குழுவினர் முகமாலையில் ஏற்பாடு செய்திருந்த போதிலும் இறுதி நேரத்தில் இராணுவத் தளபதி கலந்துகொள்ளாததினால் அச் சந்திப்பு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## தேர்தல் வன்முறைகள் தொடர்பான அறிக்கை ஜனவரியில் வெளியிடப்படும்

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரான மற்றும் பின்னரான வன்முறைகள் தொடர்பான ஆய்வறிக்கையை ஜனவரிமாதம் 'பவ்ரல்' அமைப்பினால் வெளியிடப்படவுள்ளது.

தேர்தல்கண்கணிப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள தமது உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளில் ஆய்வுசெய்து வருவதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நடந்துமுடிநத ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பவ்ரல் அமைப்பைச்சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 10ஆயிரம் பேர் கண்கணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள பூர்வாங்க அறிக்கைகளை ஆய்வு செய்த பின்னர் இறுதி அறிக்கையொன்று வெளியிடப்படும். இதனபிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளர், பாராளுமன் றம, அரசாங்கம், சகல அரசியற்கட்சிகளினதும் செயலாளாகள் அனைவருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அத்துடன் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கும், அவர்களை பிரதிநிதிப்படுத்திய அமைப்புக்களுக்கும், இந்தப் பிரதிகள் வழங்கப்படவுள்ளன. (த-9)

## துப்பாக்கிச் சூட்டில் குழந்தை படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டம் கறுவாக்கேணியில் நேற்றிரவு 7.45மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சமபவம் ஒன்றில் மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று படுகாயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கு வெளியே சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்களை அவதானித்த பிரஸ்தாப குழந்தையின் தாய், வெளியே சென்று பார்த்த பொழுது, இத்துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போதே குழந்தை படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



எவன் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைகிறானோ, அவன் சுவர்க்கத்தில் இருப்பதைவிட அதிக மகிழ்ச்சியை அடைகிறான். திருப்திதான் மிகப் பெரிய ஆனந்தம் திருப்தியடையும் நிலை ஒருவன் மனதில் வேரூன்றி விட்டால் அவனைவிட உயர்ந்தவன் வேறு யாருமே கிடையாது.

சுவாமி விவேகானந்தர்

# மட்டக்களப்பில் நேற்று கைக்குண்டுத் தாக்குதல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று நடாத்தப்பட்ட கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதலின்போது 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று இராணுவத்தினரும், பொதுமகன் ஒருவரும் அடங்குவர்.

நேற்றுக்காலை வந்தாறுமூலையில் நடாத்தப்பட்ட கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ வீரர்கள் இருவர் காயமடைந்தனர்.

நேற்றிரவு வாழைச்சேனை நாவலடியில் நடாத்தப்பட்ட மற்றொரு கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயமடைந்தார்.

இதுதவிர பேத்தாளையில் இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட இன்னொரு கைக்குண்டுத் தாக்குதலில் அவ்வழியாகச் சென்ற பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

இதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை தழுவாய் பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டபோது கைவிடப்பட்ட வீடொன்றில் இருந்து சக்திவாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-4)

# நாட்டுப்பற்றாளர் வீரச்சாவு

(கிளிநொச்சி)

ஊர்காவற்துறையில் கடந்த 25 ஆம் திகதி நாட்டுப்பற்றாளர் ஒருவர் சுடப்பட்டு வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நாரந்தனை வடக்கு தம்பாட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு சசிதரன் என்ற நாட்டுப் பற்றாளரே வீரச்சாவடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (ச-4)

# போராளி வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த விபத்தின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

இரண்டாம் லெப்.நிருஷன் என்றழைக்கப்படும் குமாரவடிவேல் குணபாலன் (நாவற்காடு மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்துள்ளவராவார். (ச)

# வடக்கிலிருந்து சமாதானத்தைக் கொண்டுவருமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பிக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

யுத்தம் ஒன்று ஏற்பட்டாலும் கௌரவமான சமாதானத்தை கொண்டு வருவதாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின்போது கூறிய ஜே.வி.பியின் விமல் வீரவன்சவையும், ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்தினதேரரையும் வடக்கில் யுத்தத்திற்குச் சென்று சமாதானத்தைக் கொண்டுவருமாறு அழைப்புவிடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு யுத்தம் உத்தியோகப்பற்றற்ற வகையில் ஆரம்பமாகி இருப்பதாகவும், கடந்த சில தினங்களில் 17 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர், மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டுவரும் கொள்கைகளை மீறிவருகிறார் என்றும் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ, ஜாதிக ஹெலஉறுமயவின் எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோர் தேர்தல் மேடைகளில் நோர்வே வெள்ளைப் புலிகளை விரட்டியடிப்பதாக கூறினாலும் இன்று அரச தலைவர் நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு நோர்வேயின் உதவியை நாடுகிறார்.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரத்தைப் பகிரும் நடவடிக்கைகளுக்காக இந்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முயற்சித்தபோதிலும் அந்தப் பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# மாணவர் பேரவைச் சூழலில் இராணுவத்தினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டு அங்குவரும் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதாக கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

பேரவை வாயிற் பகுதியில் நிற்கும் இராணுவத்தினர் சுடுவதற்கு ஆயத்தமான நிலையில் துப்பாக்கிகளை வைத்துள்ளனர்.

இதனால் மாணவர் பேரவையில் நடாத்தப்படும் கணணி பயிற்சி வகுப்பிற்கு வரும் மாணவர்கள் அச்சமடைந்து வகுப்பிற்கு ஒழுங்காக வருவதில்லை என அவர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது அலுவலகத்திற்கு அருகில் நிற்கும் இராணுவத்தினரால் திறந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவர் நேற்று கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வவுனியா நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

வவுனியாவில் என்றும் இல்லாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த பெண் போராளி ஒருவர் நேற்று முன்தினம் ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட சம்பவத்தினையடுத்தே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகரப் பகுதிகளிலும் பிரதான வீதிகளிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

வாகனங்களில் செல்வோர் வழிமறிக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ச)

## அனுசரணை....

தூதுவர் யசூசி ஆகாஷியின் பயணமும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜப்பானில் நடத்தலாமென யசூசி அகாஷி தெரிவித்திருப்பதும் இதன் வெளிப்பாடென தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## தமிழ்க்கட்சி....

இன் வரதராஜப்பெருமாள் அணியின் சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தபோதும் அவர்கள் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## இ.தொ.கா....

எடுக்கப்பட்டிருப்பதாக இ. தொ.கா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் கட்சியின் கூட்டம் கட்சியின் தலைவர் ஆறுமுகன்தொண்டமானின் தலைமையில் கூடியபோது நால்வருக்கும் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை அரசாங்கத்துடன் இணையவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சியின் தலைவர் தொலைபேசியின் ஊடாக அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னர் அவர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-4)

## துப்பாக்கி....

சக சிப்பாயை அருகிலிருந்த காவலரணுக்குள் தூக்கிச்சென்றனர். பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். (ச)

# இரத்ததானம் செய்ய அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு சகல வகை இரத்தப் பிரிவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இரத்தவங்கியின் வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அனைத்துவகை இரத்தப் பிரிவுகளும் அவசரமாகத் தேவைப்படுவதால் இரத்ததானம் செய்ய முன்வரும் அனைவரையும் இரத்தவங்கியுடன் தொடர்புகொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 27.11.1949

இறப்பு : 17.11.1994





திதி: திரயோதசி

(13.12.2005)

### சிவகுரு நவரத்தினம்

(கனகா பத்திரிகை விற்பனையகம் திருநெல்வேலி - உரிமையாளர்)

இல்லறத்தை நல்லறமாய் நடத்தியே
இவ்வுலகில் பெருமையுடன் வாழ்ந்தீர்கள்
நல்லவராய் வல்லவராய் வாழ்ந்தே
நாளெல்லாம் நற்பணிகள் செய்தீர்கள்
பிள்ளைகளை பிரியமுள்ள மனைவியினை
பெற்றநாள் முதலாய் பேணிக் காத்தீர்கள்
வல்லவராய் வையமதில் வளமோடு வாழ்ந்த
வரலாற்றை எண்ணி வியக்கின்றோம் அப்பா

– குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
60, பலாலி வீதி, திருநெல்வேலி

நிரந்தர முகவரி: "கனக இல்லம்"
கைதடி கிழக்கு, கைதடி

(C-012)

மனோகரா யாழ்.

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
காலை 10.30 இற்கு இளைய தளபதி விஜய், அசின் நடித்த சிவகாசி
1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக
இன்றுமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த ஆறு
புதிய காட்சிநேரம்: காலை 10.30, மதியம் 1.30 மாலை 4.30, இரவு 7.30,10.30 (புதியநேரம்)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம், சினேகா, அபர்ணா நடித்த




கா.நே: 10.30, 1.30, 4.30, இரவு 7.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
International Super Star Hero
Tomcruist in
WAR OF THE WORLD
கா.நே: 11.00, 2.45, 6.00(பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.